# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 தை 30 திங்கட்கிழமை (12-02-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:77


# புலிகளை பிரிட்டன் தடை செய்வதற்கு வாய்ப்புகள் அதிகம்!

## இந்திய அழுத்தமே காரணமாம்

கொழும்பு,பெப்ரவரி12

பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்த்து, அந்த இயக்கத்தின் மீது பிரிட்டன் தடை விதிப்பது பெரும்பாலும் நிச்சயமாகிவிட்டதாக லண்டன் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரிட்டனின் இந்த முடிவுக்கு இந்தியத் தரப்பில் இருந்து கொடுக்கப்பட்ட அழுத்தமே பெரிதும் காரணம் என்றும் அத் தகவல்கள் தெரிவித்தன.

"புலிகள் மீது தடை விதிப்பது என்ற முடிவை நோக்கி பிரிட்டன் அரசு நகர்வதற்கு இலங்கைத் தரப்பில் இருந்து கொடுக்கப்பட்ட அழுத்தம் முக்கிய காரணமல்ல; சந்தடியின்றி இந்தியத் தரப்பு தொடர்ந்து கொடுத்து

(12ஆம் பக்கம் பார்க்க)

# சமாதான முயற்சியை அத்தடை பாதிக்காது என்கிறார் சந்திரிகா

## பாலசிங்கத்தின் பேட்டிக்குப் பதில்

கொழும்பு,பெப்ரவரி12

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை பிரிட்டிஷ் அரசாங்கம் தடைசெய்தாலும் கூட அது சமாதான முயற்சிகளை ஒரு போதும் பாதிக்காது.

- இவ்வாறு கூறியிருக்கின்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் 'சுடர் ஒளி' பத்திரிகைக்கு வழங்கிய பேட்டிக்குப் பதில் அளிக்கும் விதத்தில் ஜனாதிபதி சந்திரிகா நேற்று அறிக்கை ஒன்றை விடுத்தார்.

பிரிட்டிஷ் அரசாங்கம் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்யப் போகின்றது. அவ்வாறு நடக்குமானால் அது இலங்கையில் சமாதான முயற்சிகளில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் - என்று கொழும்பில் இருந்து வெளியாகும்

(12ஆம் பக்கம் பார்க்க)

# லண்டனில் அன்ரன் பாலசிங்கத்தின் வீட்டின் மீது இனந்தெரியாத குழு அதிகாலையில் தாக்குதல்!

லண்டன்,பெப்.12

லண்டனில் தங்கியுள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் ஸ்டனிஸ்லஸ் பாலசிங்கத்தின் உயிருக்கு உலைவைக்கும் நோக்குடன் கடந்த மூன்றாம் திகதி, சனிக்கிழமை அவரது லண்டன் வீட்டின் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாக செய்தி ஏஜென்ஸிகள் அறிவித்திருக்கின்றன.

லண்டன் மாநகரின் மத்தியில் அமைந்துள்ள அவரது வீட்டின் மீது அதிகாலை 2 மணியளவில் இனந்தெரியாத குழு ஒன்று திடீரென வந்து நடத்திய இத்தாக்குதல் அவரது உயிருக்கு உலைவைக்கும் முயற்சியாகவே கருதப்படுகிறது.

வீட்டு வளவுக்குள் நுழைந்த இக்குழுவினர் வீட்டின் முன்புறக் கதவுகளை உடைத்து உள்ளே புக முயன்றுள்ளனர்.

ஆனால் வீட்டில் பொருத்தப்பட்டிருந்த அபாய மணி ஒலியெழுப்பியதை அடுத்து அவர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றனர்.

தப்பிச் செல்வதற்கு முன்னர் அவர்கள் வீட்டின் ஜன்னல் கண்ணாடிகள் மற்றும் பாலசிங்கத்தின் கார் கண்ணாடிகள் ஆகியவற்றை அடித்து நொருக்கிவிட்டும் காரின் நான்கு ரயர்களையும் வெட்டிச் சேதப்படுத்திவிட்டும் சென்றுள்ளனர்.

தாக்குதல் இடம்பெற்ற சமயம் பாலசிங்கமும் அவரது

(12ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைப் படைகளுக்கு உதவுவது குறித்து

# 3 நாடுகளின் இராணுவ அதிகாரிகள் கொழும்பு வந்து பேச்சு நடத்தினர்

கொழும்பு,பெப்.12

மூன்று வெளிநாடுகளின் உயர் இராணுவ அதிகாரிகள் கடந்த சில வாரங்களில் கொழும்புக்கு வந்து இலங்கை இராணுவத்துக்கு வழங்க வேண்டிய உதவிகள் குறித்துப் பேச்சு நடத்திச் சென்றிருப்பதாக கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டிருக்கின்றன.

கடந்த வார இறுதியில் செக் கோஸ்லேவாக்கியாவில் இருந்து வந்த உயர்மட்ட இராணுவ அதிகாரிகள் குழு மூன்று நாள்கள் கொழும்பில் தங்கியிருந்து இலங்கை அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியுள்ளது.

செக் குடியரசு இராணுவத்தின் சிரேஷ்ட தலைமை அதிகாரி லெப்ரினன்ட் ஜெனரல் ஜிரி சிடிவி தலைமையிலான இக்குழு இலங்கைப் படைகளுக்கு ஆயுதத் தளபாடங்கள் விநியோகிப்பது பற்றிய பேச்சுக்களைக் கொழும்பில் நடத்தியுள்ளது. இதன் தொடராக செக் நாட்டு அமைச்சர்கள் குழு ஒன்றும் விரைவில் கொழும்பு வந்து மேலதிக விடயங்கள் குறித்து இலங்கையுடன் பேச்சு நடத்தும் எனத் தெரிவிக்கப்பட்டது.

பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர் பேர்விஷ் முஷாரப் தனது இராணுவத்தின் இரண்டாவது நிலை உயர்

(12ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைக்கு பாகிஸ்தான் ரூ.175 கோடி கடன் உதவி!

## ஆயுதத் தளபாடங்கள் வாங்குவதற்கு

இலங்கைப் படைகளுக்குத் தேவையான ஆயுதத் தளபாடங்களை அவசரமாகக் கொள்வனவு செய்வதற்கு உதவியாக சுமார் 175 கோடி ரூபா கடன் வசதியை வழங்குவதற்கு பாகிஸ்தான் முன்வந்துள்ளது.



கொழும்பு வந்த பாகிஸ்தானின் உயர் இராணுவ அதிகாரிகள் குழுவின் தலைவர் லெப்ரினன்ட ஜெனரல் முகமட் யூசுப்கானுக்கு இலங்கை இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல நினைவுப் பரிசில் ஒன்றை வழங்கியபோது எடுக்கப்பட்ட படம்.

கடந்த மாத இறுதியில் பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர் பேர்விஸ் முஷாரப்பின் விசேட தூதுவர்களாக வந்த அந்த நாட்டு இராணுவ உயர் அதிகாரிகள் குழு இந்தக் கடன் உதவித் திட்டம் பற்றிய விவரங்களை இலங்கை அதிகாரிகளிடம் தெரிவித்ததாகச் செய்தி ஏஜென்சிகள் தகவல் வெளியிட்டன. பாகிஸ்தானின் உதவியை இலங்கைத் தரப்பு நன்றியோடு வரவேற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## வவுனியாவில் கிளைமோர் குண்டு மீட்பு

வவுனியா,பெப்.12

வவுனியா மதகுவச்சகுளம் பகுதியில் நேற்றுமுன்தினம் நிலத்தினடியில் புதைத்து வைக்கப்பட்டிருந்த கிளைமோர் குண்டு ஒன்றையும் தற்கொலையாளிகள் அணியும் 'ஜக்கற்' ஒன்றையும் பொலீஸார் கைப்பற்றி உள்ளனர்.

இது தொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலீஸார் தெரிவித்தனர். (ம-164)

## விடுமுறை வழங்க மறுத்ததற்காக

# உயரதிகாரி மீது குண்டுவீசிய கடற்படைக் கனிஷ்ட அதிகாரி!

வவுனியா,பெப்.12

விடுமுறையில் செல்ல அனுமதி வழங்கப்படாததால் சீற்றமடைந்த கடற்படை அதிகாரி ஒருவர் தனது உயர் அதிகாரி மீது குண்டு வீச்சு நடத்தினார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன் தினம் சனிக்கிழமை பிற்பகல் 3மணியளவில் தலைமன்னாரில் உள்ள கடற்படையினரின் பிரதான முகாமில் இடம்பெற்றது.

சம்பவம் பற்றி தெரிவிக்கப்படுவதாவது:-

கடற்படையின் ஆரம்ப நிலை அதிகாரியான எச்.டபிள்யூ.டயஸ் என்பவர் விடுமுறையில் செல்ல சம்பந்தப்பட்ட முகாமின் பொறுப்பதிகாரியிடம் அனுமதி கோரினார். எனினும் விடுமுறைக்கான அனுமதி மறுக்கப்பட்டது. இதனால் சீற்றமடைந்த அவர் தன்னிடம் இருந்த கைக்குண்டை உயரதிகாரியை நோக்கி எறிந்தார். குண்டு வெடித்தது. குண்டுத் தாக்குதலை நடத்தியவரும் முகாமின் பொறுப்பதிகாரியும் மற்றும் ஒருவரும காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(உ-7-164)

## பிரதான மின்மாற்றிகளில் பழுது காரணமாக

# யாழ்.நகரப் பகுதிக்குத் தற்காலிகமாக சுழற்சிமுறையில் மின்சார விநியோகம்

யாழ்ப்பாணம்,பெப்.12

யாழ்.நகரப் பகுதிக்கான மின் விநியோகம் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு நாளாந்தம் அவற்றுள் இரண்டு பிரிவுகளுக்கே இனி சுழற்சி முறையில் மின் விநியோகம் வழங்கப்பட உள்ளது.

இது தொடர்பாக மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்ததாவது:-

திருநெல்வேலி - பரமேஸ்வரா மின் பரிவர்த்தனை நிலையத்தில் உள்ள மூன்று பிரதான மின்மாற்றிகள் ஊடாகவே யாழ்நகரப் பகுதிக்கு மின்சாரம் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

காங்கேசன்துறை மற்றும் சுன்னாகம் மின் உற்பத்தி நிலையங்களில் இருந்து 33 ஆயிரம் 'வோல்ற்' அழுத்தத்தில் வரும் மின்சாரத்தை பரமேஸ்வரா பரிவர்த்தனை நிலையத்தில் உள்ள மின்மாற்றிகள் 11 ஆயிரம் 'வோல்ற்' அழுத்தத்துக்கு படிமாற்றம் செய்து கொடுக்கின்றன.

அது பின்னர் பல்வேறு இடங்களிலும் உள்ள உப மின்மாற்றிகள்

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## திறப்பு விழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் தைமாதம் 30ஆம் நாள் (12-02-2001) திங்கட்கிழமை காலை 7.00 - 8.00 மணியளவில் உள்ள சுபவேளையில்

**கரன் பிறின்ரேர்ஸ்**

**KARAN PRINTERS**

என்னும் ஸ்தாபனத்தை ஆரம்பிக்கின்றோம். இந்நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*303A,பலாலி வீதி,*
*பரமேஸ்வராச் சந்தி,*
*திருநெல்வேலி.* (84065)

கரன் பிறின்ரேர்ஸ்
உரிமையாளர்கள்.


## யாழ் குடாநாட்டு மக்களுக்கு

## ஒரு நற்செய்தி

☆ தன்னம்பிக்கையே வாழ்க்கையின் இரகசியம்.

☆ மகாவலி மெரைன் சீமெந்தே கட்டடத்தின் உறுதியின் இரகசியம்.

☆ சிறந்த தரத்தின் சின்னம்

**மகாவலி மெரைன (சிமெந்து)**

விரைவில் உங்கள் கைகளில்!

யாழ்.குடாநாட்டில் மொத்தமாகக் கிடைக்குமிடங்கள்.

**E.S. பேரம்பலம் & கம்பனி**

*இல.50, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*
*தொ.பே.இல.021-2988*

**பாக்கியரட்ணம் ஹாட்வெயர் ஸ்ரோர்.**

*பிரதான வீதி, சங்கானை.*
*தொ.பே.இல.021-2664, 070-212713.*

யாழ்.மாவட்டத்துக்கான

MAHAWELI MARINE CEMENT Co. L.T.D.

(மகாவலி மெரைன் சிமெந்து நிறுவனத்தினரால்)

அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தர்

**C.SIVASAMY & Co.**

A/G/3, SANCHI ARACHCHI GARDEN,
COLOMBO - 12.
Tel. : 449371 324615, 470186,
FAX : 470187, 466659. (C/15256)


## சமுர்த்தி செயலணிக் கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.12

தாவடி தெற்கு (ஜே-192) கிராம அலுவலர் பிரிவுக்கான சமுர்த்தி செயலணிக் கூட்டம் நாளை செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3 மணிக்கு தாவடி இந்து தமிழ்க் கலைவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது. (ம)


*ஆரம்பமாகின்றது!*

**மாதாந்தப் பரீட்சை - தை**

தரம் 1 முதல் - 11 வரை
எதிர்வரும் சனி 18.02.2001
8.30 - 2.00 மணிவரை

எம்முடன் இணைந்து பரீட்சையை நடத்தும் நிறுவனங்களும் நீங்கள் பரீட்சைக்குத் தோற்றலாம்.

**BOND - மார்ஷனர்** (84060)

**லஷ்சுமி** இணுவில்

இன்று 12.02.2001 முதல்

பிரசாந்த், லைலா, வையாபுரி நடித்த (84062)

**பார்த்தேன் ரசித்தேன்**

(தினசரி) காட்சிகள்:11.00, 2.30(பு.நே.)

**ராஜா**
யாழ்ப்பாணம்

விஜயகாந்த், தேவயானி, ரகுவரன், அம்பிகா மற்றும் பலர் நடிப்பில் (C/15258)

**வல்லரசு**

காட்சிகள்: 10.30, 2.30 (பு.நே.)

**நாகம்ஸ்**
சுன்னாகம்

பிரபுதேவா-சரத்குமார் ஜெயாசீல நடித்த

**பெண்ணின் மனதைத்தொட்டு**

(தினசரி)

காட்சிகள்:11.00, 2.30 (புதிய நேரம்)


## திருமண வாழ்த்து

இன்று (12-02-2001)திங்கட்கிழமை கொழும்பு ஒட்சாட் திருமண மண்டபத்தில் (காலி வீதி) திருமணம் செய்து கொள்ளும்

| | |
|---|---|
| 44, வற்றர பல வீதி, கல்கிசை. | 22, இரணஜகம வைத்தியா வீதி, தெஹிவளை. |
| அமரர் திரு.திருமதி அ.இராசதுரை | அமரர் திரு.கு.வேல்முருகு திருமதி க.வேல்முருகு |
| அவர்களின் புத்திரன் | அவர்களின் புத்திரி |
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| தமிழ்ச்செல்வன் | ஞானாம்பிகை |

இருவரையும் மனமொழிகளால் வாழ்த்தி வாழ்க பல்லாண்டு வளமுடன் வாழ்கவென வாழ்த்துகிறோம்.

திரு.திருமதி கை.மகேசலிங்கம் குடும்பமும் உறவினர்களும், புத்தூர் வடக்கு, புத்தூர்.

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் கடமையாற்றிய

**திருமதி வினிபிறீடா பாலதாசன்**

அவர்களின் சகோதரியும் தற்போது கடமையாற்றிவரும்

**திருமதி சந்திரகலா சில்வெஸ்டர்**

அவர்களின் மைத்துனியுமாகிய

**செல்வி பெனிக்னா றஜனி பிரான்சிஸ்பிள்ளை**

அவர்கள் 09.02.2001 அன்று காலமானதையிட்டு கோப்பாய் நாவலர் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் தமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் குடும்பத்துக்கு தமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறார்கள்.

**ஆசிரியர் கழகம்,**
**கோப்பாய் நாவலர் வித்தியாலயம்.** (C/15259)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 04 - 07 - 1922 | 24 - 02 - 2000 |

**திருமதி முத்தம்மா வேலுப்பிள்ளை**

அன்பின் தெய்வமாய்
ஆசையுடன் எமைக் காத்து
இன்ப வாழ்வு தந்த தெய்வமே!
விண்ணுலகம் சென்றாயோ?
இந்நாளில் உமது ஆத்ம சாந்திக்காய்
பிரார்த்திக்கின்றோம்.

*65, முருகமூர்த்தி வீதி,*
*வண்ணார் பண்ணை,*
*யாழ்ப்பாணம்.* (84063)

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## நினைவஞ்சலி

**6 ஆம் மாதம்** **31 ஆம் நாள்**

| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 1975 - 08 - 11 | 2000 - 08 - 11 |



| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 1940 - 01 - 12 | 2001 - 01 - 13 |



செல்வன்
**முருகேசு சுதர்சன்** (ராசன்)

திருமதி
**முருகேசு மனோன்மணி**

குடும்பத்தின் ஒளி விளக்காய் குலவிளக்காய் திகழ்ந்தாயே....
இல்லத்தில் ஒளி மறைந்தாலும் உள்ளத்தின் இருளோ இன்னும் மறையவில்லை
மாயமாய் வந்த காலன் ஜாலமாய் அழைத்ததேன்?
களை இழந்த கணவரும், பிள்ளைகளும் துயர் கொண்டு
அழுவதற்கா துயில் கொள்ள மறைந்தீர்கள்....
தாய் செய்த தவத்தால் நீ மண்ணில் வந்தாய்
சேய் செய்த தவம் தான் என்ன நீ விண்ணில் செல்ல....
நோய் கொண்டு போனதோ உன்னை - எம்
கண்ணை விட்டு
வாய்விட்டுப் புலம்புகின்றோம் மீண்டும் இனிக் காண்பது எப்போ---?
உங்கள் ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*தற்காலிக முகவரி:*
*புலவர் ஒழுங்கை,*
*நவாலி வடக்கு,*
*மானிப்பாய்.* (84027)

தகவல்:
**எஸ்.துரை**

**- குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

**தில்லையம்பலம் அமரசிங்கம்**

*(இளைப்பாறிய ரயில் நிலைய அதிபர்)*

தலையாழி, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் அமரசிங்கம் நேற்று (11.02.2001) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லையம்பலம் - கோதாவரிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சரவணமுத்து - அன்னம்மா ஆகியோரின் அன்பு மருமகனும் பூமணிதேவியின் அன்புக் கணவரும், ஆனந்தஜோதி, மதிவதனி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், காலஞ் சென்ற கமலாம்பிகையின் அன்புச் சகோதரனும் பூரணம், நடராஜா, காலஞ் சென்றவர்களான இராஜரட்ணம், சோதிப்பிள்ளை, வேலாயுதபிள்ளை, செல்லத்துரை, மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.02.2001) திங்கள் நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

*225, சபாபதி வீதி,*
*தலையாழி, கொக்குவில்.* (84066)

*தகவல்:*
அ.ஆனந்தஜோதி, அ.மதிவதனி
(பிள்ளைகள்)

உதயன்

## காரணமில்லாக் கைது!

கொழும்பு மற்றும் மலையகம் வாழ் தமிழ் மக்களைக் கைது செய்யும் பொலீஸாருக்கே தாம் ஏன் அவர்களைக் கைது செய்கிறார்கள் என்பது தெரியாது! அவர்கள் விடுதலைப்புலிகளைச் சேர்ந்தவர்களாகவோ அல்லது அந்த அமைப்பின் ஆதரவாளர்களாகவோ இருக்கக் கூடும் என்ற ஊகத்தின் பேரில் மட்டுமே கைது செய்கிறார்கள்!!

இதனைச் சொல்வது நாமல்ல. எதிரணியில் உள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அல்லர் கொழும்பில் உயர் பொலிஸ் அதிகாரிகள், அரசியல் பிரமுகர்கள் பங்குபற்றிய கருத்தரங்கு ஒன்றில் நீதி அமைச்சர் பட்டிவிரக்கோன் மிக வெளிப்படையாகக் கூறிய தகவல் இது.

இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு மாவட்டங்களில் மட்டுமன்றி—

கொழும்பு, கம்பஹா மற்றும் மலையக மாவட்டங்களிலும் தமிழ் மக்கள் வயது, பால் வேறுபாடின்றிக் கண்டபடி—காரணம் தெரிவிக்கப்படாமலே கைது செய்யப்படுகிறார்கள்.

மேலும் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்படுவோர் உரிய முறையில் விசாரணை செய்யப்படாமல் நீண்ட காலத்துக்குத் தடுத்துவைக்கப்படுகின்றார்கள். கைது செய்யப்பட்ட மகனுக்கு என்ன நேர்ந்தது என்று அறிவதற்காகப் பொலிஸ் நிலையம் செல்லும் தந்தையும் கைது செய்யப்படுகிறார்! அந்தளவுக்குக் கொழும்பு வாழ் தமிழர்கள் மீது நாளாந்தம் பலவகையான பாதுகாப்புக் கெடுபிடிகள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன.

இந்தக் கெடுபிடிகளைக் குறைப்பதற்காக, கொழும்பு வாழ் தமிழர்கள் படும் கஷ்டங்களை நீக்குவதற்காக ஜனாதிபதியினால் தொல்லை தவிர்ப்புக் குழு ஒன்று உருவாக்கப்பட்டது. ஆனால் அதன் பின்னரும் கொழும்பு வாழ் தமிழர்களுக்கு உள்ள பாதுகாப்புத் தொல்லை முற்றாக நீங்குவதாக இல்லை.

நீதி அமைச்சர் பட்டிவிரக்கோன் தொல்லை தவிர்ப்புக் குழுவின் அங்கத்தவர்களில் ஒருவராக முன்னர் இருந்தவர். இப்போது அக்குழுவின் தலைவராகப் பணிபுரிகிறார். அதனால் அவரது தகவல்கள் கருத்துக்கள் கவனத்தில் எடுக்கப்படத்தக்கவை.

கைது செய்யப்படும் தமிழ் இளைஞர்களின் பெயர்களை அதிகாரிகள் வித்தியாசம் வித்தியாசமாக எழுதுவதால் அப்பாவிகள் நீண்ட காலம் தடுத்து வைக்கப்படுகின்றனர் என்ற விவரமும் தெரியவந்துள்ளது.

நீதி அமைச்சர் தெரிவித்த விடயங்கள், அதிகாரிகளின் அக்கறையில்லாத நடவடிக்கையால் அப்பாவித் தமிழர்கள் எவ்வாறு பாதிக்கப்படுகிறார்கள் என்பதற்கு நல்ல உதாரணம்.

அப்பாவிகள் காரணமின்றிக் கைது செய்யப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதனையும் நீதி அமைச்சர், அங்கிருந்த பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கு எடுத்துரைத்துள்ளார்.

தமிழர்கள் என்றால் எதுவும் செய்யலாம்; எப்படியும் நடத்தலாம் என்ற மனோபாவம் படை மற்றும் அரச அதிகாரிகளிடம் வேரூன்றி இருப்பதுவே இத்தகைய பாதிப்புகளுக்குக் காரணம். தமிழர்களை இரண்டாந்தரப் பிரஜைகளாகக் கருதும், கருதிச் செயற்படும் நிலையை அரசு மாற்றாவிடில் இந்நிலையே நீடிக்கும்; மாற்ற இயலாது. அரசியலார் கருத்துச் செலுத்துவார்களா?

# சித்திரவதை தொடர்பான விசாரணைகளை நடத்த

# இரகசியப் பொலீஸ் அதிகாரிகள் இன்று வருகை

யாழ்ப்பாணம், பெப். 12

யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து கிடைத்த சித்திரவதை தொடர்பான முறைப்பாடுகள் குறித்து விசாரணை நடத்துவதற்காக, கொழும்பிலிருந்து விசேட இரகசியப் பொலீஸ் அதிகாரிகள் குழு இன்று யாழ்ப்பாணம் வருகின்றது.

நான்கு இரகசியப் பொலீஸ் அதிகாரிகளைக் கொண்ட குழு, யாழ்ப்பாணம் பொலீஸ் தலைமை அலுவலகத்தில் வைத்து நாளை செவ்வாய்க்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை 16 ஆம் திகதி வரை தனது விசாரணைகளை நடத்தும்.

சித்திரவதை குறித்து முறைப்பாடு செய்த 13 பேர் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் பணிப்பின்பேரிலேயே இந்த விசாரணைகள் நடத்தப்படுவதாகப் பொலீஸ் அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

விசேட குழுவினால் விசாரிக்கப்பட உள்ளோர் விபரம் வருமாறு: -

1996 ஆம் ஆண்டில் பின்வரும் பாடசாலைகளின் அதிபர்களாகப் பணி புரிந்தோர்

(1) அச்சுவேலி மகாவித்தியாலயம்,

(2) அத்தியார் இந்துக் கல்லூரி, நீர்வேலி.

(3) ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி, புத்தூர்.

மற்றும் பின்வருவோர்:-

(4) செல்வராஜா தேனுகா காளிகோயிலடி, பத்தமேனி, அச்சுவேலி.

(5) பொன்னையா செல்வராஜா, காளி கோயிலடி, அச்சுவேலி.

(6) வீரபத்திரன் தேவி, காட்டுப்புலம், கரவெட்டி கிழக்கு.

(7) கணபதிப்பிள்ளை நவரத்தினம், ஆழியவளை, தாளையடி.

(8) ஞானசிங்கம் அன்ரோ குலசிங்கம் (குருநகர், யாழ்ப்பாணம்) என்பவரின் குடும்ப உறவினர்.

(9) புஷ்பமலர், சாவகச்சேரி கிழக்கு.

(10) எஸ். செல்வராணி, மீசாலை, சாவகச்சேரி.

(11) வல்லிபுரம் சுகந்தி 33, ஸ்ரான்லி கல்லூரி, ஒழுங்கை, அரியாலை.

(12) செல்வரத்தினம் ரவிசங்கர், முதலாம் வட்டாரம். நயினாதீவு.

(13) எட்வேர்ட் நேசகுமார் மயிலியதனை, பருத்தித்துறை.

இவர்கள் 13 பேரையும் தவறாது விசாரணைக்குச் சமுகமளிக்குமாறு இரகசியப் பொலீஸ் பகுதி கேட்டுள்ளது.

# பல லட்ச ரூபா உடைமைகளை நவீல்ட் பாடசாலை இழந்தது

## மாணவர்கள் தரையிலிருந்து பயிலும் பரிதாபம்

நெல்லியடி, பெப். 12

கைதடி, நவீல்ட் பாடசாலையில் இருந்த ஜெனறேற்றர், மின் உபகரணங்கள், மாணவர்களின் மின் கருவிகள் உட்பட பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் அங்கிருந்து திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பாடசாலை உடைமைகளை மீட்பதற்கு, பாடசாலை அதிபர் திருமதி சி. பத்மபாலன், பிரதம லிகிதர் கே. தேவதாஸ், ஆசிரியர் எம் மகேந்திரசிங்கம் ஆகியோர் கடந்த செவ்வாய்க்கிழமை அப்பகுதிக்குச் சென்று அங்கிருந்து சில ஆவணங்களை மட்டும் மீட்டுவந்துள்ளனர்.

பாடசாலைக் கட்டடம் ஷெல் வீச்சினால் முற்றாகச் சேதமடைந்து, தரைமட்டமாகக் காணப்படுவதாகவும், மாணவர்களின் பாவிப்பில் இருந்த தளபாட வகைகளும் மற்றும் பிற கருவிகள், ஜெனறேற்றர் போன்றவை திருடப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் இப்பாடசாலைக்குச் சுமார் 45 லட்சம் ரூபா வரை நஷ்டம் ஏற்பட்டிருக்கின்றது என்றும் பாடசாலை அதிபர் தெரிவித்தார்.

இதேவேளை இப்பாடசாலை, தற்போது சுண்டிக்குளி சென். ஜேம்ஸ் அக்கடமியில் இயங்கி வருகின்றபோதிலும் போதிய இருக்கைகள் இன்றிப் பல மாணவர்கள் தரையில் இருந்து கல்வி கற்பதாகவும் —

இலங்கைத் தீவில் வலது குறைந்தோருக்கான ஒரேஒரு தமிழ்ப் பாடசாலையாக விளங்கும் நவீல்ட் பாடசாலைக்கு உதவி செய்ய இதுவரை அரச சார்பற்ற நிறுவனங்கள் எதுவும் முன்வராமை பெரும் வேதனையைத் தருகின்றது என்றும்—

நவீல்ட் பாடசாலை மாணவர்களின் நலன் கருதி, அண்மையில் உள்ள சென். ஜேம்ஸ் மகளிர் பாடசாலை, சென். ஜோன்ஸ் பாடசாலை என்பன சொற்ப எண்ணிக்கையான தளபாடங்களை அன்பளிப்புச் செய்துள்ளன என்றும் —

அவர் மேலும் தெரிவித்தார் (உ-109)

# சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டால் கடும் நடவடிக்கை

## பிரதேச சபைத் தலைவர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 12

வலிகாமம் மேற்குப் பகுதியில் சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்க ஒத்துழைக்குமாறு வலிகாமம் மேற்குப் பிரதேசசபைத் தலைவரும் வட்டுக்கோட்டைத் தொகுதி ஈ.பி.டி.பி. அமைப்பாளருமான ந. திரிலோகநாதன் கேட்டுள்ளார்.

இப்பகுதியில் உள்ள சங்கரத்தை, கல்லுண்டாய், மானிப்பாய் போன்ற இடங்களில் இனந்தெரியாத கோஷ்டியினர் மக்களின் அடையாள அட்டைகளை அபகரிப்பதாகவும் இரவுவேளைகளில் களவு மற்றும் கசிப்பு வியாபாரத்தில் ஈடுபடுவதாகவும் பொது மக்கள் எமக்கு புகார் தெரிவித்துள்ளனர். அத்துடன் எமது கட்சியின் பெயரையும் அவர்கள் பயன்படுத்தியுள்ளமை தெரியவந்துள்ளது.

அமைதியைக் குழப்பும் இவ் விரோதக் கும்பல்கள் சம்பந்தமாக தமக்கோ அல்லது அருகில் உள்ள பொலீஸ் நிலையத்துக்கோ தகவல் தருமாறு பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோகநாதன் விடுத்த அறிக்கையில் கேட்டுள்ளார்.

(ஐ-173)

# யாழ். மாவட்ட உதைபந்தாட்ட அணி தெரிவு

யாழ்ப்பாணம், பெப். 12

இந்த ஆண்டுக்கான யாழ். மாவட்ட உதைபந்தாட்ட அணி வீரர்களைத் தெரிவு செய்வதற்கான நிகழ்வு இன்று மாலை 4 மணிக்கு துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறும் என யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ரூபசிங்கம் அறிவித்துள்ளார்

இதுவரைப் பயிற்சிக்கு வருகை தராதவர்களை தவறாது சமூகம் தரும்படியும் அவர் கேட்டுள்ளார்.

# ‘சக்கரம்’ வெளியீடு

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியத்தின் வெளியீடான ‘சக்கரம்’ சஞ்சிகையின் ஆறாவது வெளியீட்டு விழா இன்று பிற்பகல் 3 மணிக்கு பல்கலைக்கழக பௌதிகவியல் விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராகவும், விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் இ. குமாரவடிவேல் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (உ—7)

# சிவாச்சாரியார் பயிற்சி வகுப்பு இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப். 12

அகில இலங்கை சைவக் குருமார் அர்ச்சகர் சபையினால் சிவாச்சாரியார்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் இன்று திங்கட்கிழமை மாலை 3 30 மணிக்கு நாயன்மார்கட்டு அரசடிப் பிள்ளையார் கோயிலடியிலுள்ள சைவக் குருமார் பயிற்சிக் கல்லூரியில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இன்று சைவக்குருமார் பயிற்சிக் கல்லூரி வளர்ச்சி தொடர்பான கலந்துரையாடலும் இடம்பெறவிருப்பதால் அனைத்து உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது (உ-173)

# சிகரெட் தட்டுப்பாடு ஏற்படாமல் தவிர்க்க புதிய கிளை நிலையம்

யாழ்ப்பாணம், பெப். 12

யாழ். குடாநாட்டில் சிகரெட்டுக்குத் தட்டுப்பாடு ஏற்படாமல் தவிர்ப்பதற்காகப் புதிய கிளை ஒன்றைச் சிகரெட் வியாபாரத்தின் ஏக போக உரிமையாளர்களாகிய சிலோன் டுபாக்கோ கம்பனி நிறுவனம் இன்று யாழ். கே.கே.எஸ். வீதியில உள்ள 100 ஆம் இலக்கக் கட்டடத்தில் திறந்து வைக்கவுள்ளது.

இக்கிளை நிலையம் சிகரெட் காட்சி அறையாகவும் விற்பனை நிலையமாகவும் செயற்படும்.

இக்கிளையின் நிர்வாகத்தைச் சிலோன் டுபாக்கோ கம்பனியின் யாழ். விநியோகஸ்தர்களான குகன் ஸ்ரோர்ஸ் நிறுவனத்தினர் மேற்பார்வை செய்வர். (உ)

# நாளை

மாசி 1

செவ்வாய்க்கிழமை

திதி: ஷஷ்டி

பின் இரவு 3. 15 வரை.

நட்சத்திரம்: சித்திரை

பிற்பகல் 3. 16 வரை.

அமிர்தநேரம்: 11.04 — 12.34

ராகுகாலம்: 3.34—5.04

(பகலுக்கும் இரவுக்கும் பஞ்சாங்க நேரப்படி)

**உதயவாக்கு**

சந்தோசமான வாழ்க்கை திருப்தியான மனதில் இருக்கிறது.

# ஐ.தே.கவின் மாற்றுக் குழுவினர் நேற்று புதிய கட்சி அமைப்பு

கொழும்பு, பெப். 12

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து கடந்த வருடம் பிரிந்து சென்ற ஐக்கிய தேசியக் கட்சியின் மாற்றுக் குழுவினர் "ஐக்கிய தேசிய மாற்று முன்னணி" என்ற பெயரில் புதிய அரசியல் கட்சி ஒன்றை நேற்று ஆரம்பித்துள்ளனர் என்று இலங்கை வானொலி அறிவித்தது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மாற்றுக் குழுவின் கூட்டம் நேற்று நண்பகல் நீர்கொழும்பில நடைபெற்ற போதே அரசியல் கட்சி ஒன்றை உருவாக்குவது என முடிவு செய்யப்பட்டது.

விடுதலைப் புலிகள் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கடைப்பிடித்து வரும் கொள்கைகளே தாம் புதிய கட்சி ஒன்றை ஆரம்பிக்கக் காரணம் என இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட ஐ.தே.கவின் மாற்று அணியைச் சேர்ந்த முனிதாஸ குமாரணதுங்க தெரிவித்தார்.

ஐ.தே. கட்சியின் மாற்றுக் குழுவைச் சேர்ந்தவர்கள் அண்மைக்காலமாகப் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசுக்கு ஆதரவு அளித்து வந்தனர் என்பது தெரிந்ததே.

(உ-7-ரி)

# வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த 11 பாடசாலைகளுக்கு மூடுவிழா

வடமராட்சி கிழக்கு, பெப். 12

இடம்பெயர்வை அடுத்து வடமராட்சி கல்வி வலயத்தில் 11 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன.

இதனையடுத்து வடமராட்சி கல்வி வலயத்திலுள்ள மருதங்கேணி கோட்டத்தின் பாடசாலைகளின் எண்ணிக்கை 17 இல் இருந்து ஆறாகக் குறைந்துள்ளது.

கட்டைக்காடு றோ. க. த.க. பாடசாலை, வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா கனிஷ்ட மகா வித்தியாலயம், வெற்றிலைக்கேணி றோ. க. த. க பாடசாலை, ஆழியவளை சி.சி.த க பாடசாலை, உடுத்துறை மகா வித்தியாலயம், மருதங்கேணி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை — தாளையடி றோ.க.த.க பாடசாலை, செம்பியன்பற்று அ.த.க பாடசாலை, செம்பியன்பற்று றோ.க.த.க பாடசாலை, மாமுனை அ.த.க பாடசாலை, நாகர்கோயில் அ.மி.த.க. பாடசாலை, ஆகியனவே மூடப்பட்ட 11 பாடசாலைகள் ஆகும்.

இந்தப் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் தற்போது வடமராட்சிப் பகுதியில் இடம்பெயர்ந்து தங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இப்பாடசாலைகளை இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படாமல் மூடப்பட்டமை குறித்து அப்பகுதிப் பெற்றோர்களும் நலன் விரும்பிகளும் விசனம் தெரிவித்துள்ளனர்.

இப்பாடசாலைகளில் கடமையாற்றி வந்த ஆசிரியர்களுக்கு வடமராட்சியிலுள்ள பாடசாலைகளுக்கு நிரந்தர இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது

[ஐ-182-173]

### ஆட்சேபித்துக் கடிதம்

வடமராட்சி கிழக்கிலுள்ள 11 பாடசாலைகளை மூடுவதென்ற முடிவை ஆட்சேபித்து மூடப்பட்ட பாடசாலைகளின் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள், வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசம், வடமராட்சி கிழக்கு இடம்பெயர்ந்தோர் நலன்புரிச்சங்கம் ஆகியன வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளருக்கு கடிதங்களை அனுப்பி வைத்துள்ளன.

அத்தோடு இவ்விடயத்தை வடக்கு புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு அமைச்சர் கௌரவ கே. என். டக்ளஸ் தேவானந்தா, யாழ் மேலதிக கல்விப்பணிப்பாளர், யாழ். அரசாங்க அதிபர், வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர், பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டு வந்து நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளனர். [ஐ-182]

## பாடசாலைகளை மூடிவிடும் முடிவுக்குக் கடும் ஆட்சேபம்

வடமராட்சி கிழக்கு.பெப்.12

வடமராட்சி கிழக்கிலுள்ள இடம்பெயர்ந்த 11 பாடசாலைகளை மூடுவதென்ற முடிவுக்கு ஆட்சேபனை தெரிவித்தும் அப்பாடசாலைகளை மீண்டும் இயக்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரியும் பருத்தித்துறைப் பிரதேச சபைத் தலைவர் திரு. ஐ சிறிரங்கேஸ்வரன் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

வடமராட்சி கிழக்கிலிருந்து பாடசாலைகளும் மாணவர்களும் இடம்பெயர்ந்து ஒரு வருடமாகியும் அப்பாடசாலைகள் தனித்து நிரந்தரமாக இயங்குவதற்கு வசதிகளைச் செய்து கொடாமல் இருந்ததுமல்லாமல், அப்பாடசாலைகளை மூடுவதற்கு உத்தரவிட்டமை அப்பிரதேசத்தை முற்றாக உதாசீனம் செய்வதை உணரக்கூடியதாக உள்ளது. பளை, சாவகச்சேரிப் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த பாடசாலைகள் வடமராட்சியிலும், ஏனைய பகுதியிலும் நிரந்தரமாக இயங்க முடியும் எனில் வடமராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த வடமராட்சி கிழக்கு இடம்பெயர்ந்த பாடசாலைகள் ஏன் வடமராட்சிக் கல்வி வலயப் பிரதேசத்தில் இயங்க முடியாது என்பது எமக்கு விளங்காத விடயமாக உள்ளது. எனவே அப்பாடசாலைகளை இயக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பதுடன் அதற்குஎம்மால்மேற்கொள்ள வேண்டிய உதவிகளைச் சிபார்சு செய்யுமாறும் அக்கடிதத்தில் அவர் கேட்டுள்ளார். (ஐ-182-173)

## தீயில் எரிந்தவர் மரணம்

யாழ்ப்பாணம், பெப். 12

தனக்குத் தானே தீமூட்டி எரிந்ததாகத் தெரிவித்து கடந்த 3 ஆம் திகதி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இளம் குடும்பப்பெண் ஒருவர் நேற்று அங்கு மரணமானார்.

குருநகரைச் சேர்ந்த ஸ்டீபன் கிறசென்ஸியா (வயது 25) என்ற இளம் குடும்பப் பெண்ணே உயிரிழந்தவராவார்.

நேற்று இடம்பெற்ற மரண விசாரணை, பிரேத பரிசோதனையை அடுத்து சடலம் அவரது தந்தையாரிடம் கையளிக்கப்பட்டது. [ஐ 15]

## வீதிகளில் காதல் ஜோடிகள் தொல்லை

யாழ்ப்பாணம், பெப். 12

யாழ். கண்டுக்குளி பகுதியிலுள்ள காட்டுக்கந்தோர் ஒழுங்கையில் காதல் ஜோடிகளின் தொல்லை தினமும் அதிகரித்து வருகிறது

பாடசாலை மாணவிகளும், மாணவர்களும் சைக்கிள்களை வீதியோரம் நிறுத்தி வைத்து காதல் சல்லாபங்களில் ஈடுபட்டு வருகின்றனர்

சனி, ஞாயிறு மற்றும் போயா விடுமுறை நாள்களில் இந்த வீதியால் போக்குவரத்துச் செய்ய முடியாத அளவுக்கு காதலர்களின் தொல்லைகள் அதிகரித்துள்ளதாக அங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவர்களின் நடத்தைகளை நேரில் பார்த்த அப்பகுதி மக்கள் இவ்வாறு வீதியில் நிற்க வேண்டாம் என்று கூறிய போதும் இளம் காதலர்கள் தமது தேவைகளுக்கு இவ்வீதியினைப் பயன்படுத்தி வருகின்றனர்.

[ஐ-5]

## ஆயுள்வேத வைத்தியர்கள் ஆங்கில மருந்து வழங்கக்கூடாது

### வவுனியாவில் உத்தரவு

வவுனியா, பெப். 12

வவுனியாவில் ஆயுள்வேத ஹோமியோபதி வைத்தியர்கள் நோயாளிகளுக்கு ஆங்கில மருந்துகளை வழங்கக்கூடாது என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

வவுனியா மாகாண பிரதி சுகாதாரப் பணிப்பாளர் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். இதனை மீறும் ஆயுள்வேத வைத்தியர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

ஆங்கில மருத்துவத்தில் எந்தவித தகைமையும் இல்லாத ஆயுள்வேத வைத்தியர்கள் நோயாளர்களுக்கு ஆங்கில மருந்துகள் வழங்கி வந்தமை கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்தே சுகாதாரப்பணிப்பாளர் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இத்தகைய வைத்தியர்கள் இனிமேல் மூலிகை மருந்தினை மட்டுமே நோயாளர்களுக்கு வழங்கவேண்டும் என்று அவர் அறிவித்துள்ளார்.

வவுனியாவில் 15 தனியார் ஆயுள்வேத வைத்திய நிலையங்கள் இயங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-5-6)

## பட்டப்பின் கல்வி டிப்ளோமா தகுதி பெறாத ஆசிரியர்களுக்கு தொழில் தகைமைப் பயிற்சி

பட்டபின்கல்வி டிப்ளோமா தகுதி பெறாத பட்டதாரி ஆசிரியர்களுக்குத் தேசிய கல்வி நிர்வாகம் குறுகிய கால தொழில் தகைமைப் பயிற்சி வழங்குகின்றது.

ஆசிரியர் சேவையின் தரம் I இற்கு உள்ளீர்ப்புச் செய்வதற்கு 50 வயதை நிறைவு செய்த பட்டதாரி ஆசிரியர்கள் உரிய காலப் பகுதியில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா தொழில் தகைமை பெற்றிருக்க வேண்டும் என்பது அடிப்படை நிபந்தனையாகக் கொள்ளப்படுகின்றது. 50 வயதை நிறைவு செய்த குறிப்பிட்ட எண்ணிக்கையான ஆசிரியர்கள் பட்டப்பின் கல்வி டிப்ளோமா தொழில் தகைமையைப் பெற்றிருக்காமையினால் ஆசிரியர் சேவை தரம் I இற்கு பதவியுயர்வு பெற முடியாத நிலை ஏற்பட்டது மேற்படி ஆசிரியர்களை ஆசிரியர் சேவை தரம் I இற்கு உள்ளீர்ப்பு செய்வதற்கு வசதியாக மகரகம தேசிய கல்வி நிறுவகம் 3 மாத கால தொழில் தகைமைப் பயிற்சியை வழங்குகின்றது

பெப்ரவரி முதலாம் திகதி ஆரம்பமான இப் பயிற்சிநெறி மே முதலாம் திகதி வரை நடைபெறும். யாழ். இந்துக் கல்லூரி தொலைக்கல்விப் பயிற்சி நிலையத்தில் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த 30 பட்டதாரி ஆசிரியர்கள் தமிழ்மொழி மூலம் பயிற்சி பெற்று வருகின்றனர். (ஐ-11)


### தவறிவிட்டது

10—02—2001 அன்று இரண்டாவது விமான சேவையின் போது அதில் பயணம் செய்த

தர்மராஜா யோகம் என்பவருடைய

சாரங்கள், சேட், ரீசேட், விளையாட்டுப் பொருள்கள், சப்பாத்து ஒரு சோடி, இரண்டு பட்டுக்கவுண், சேலைகள்

என்பன அடங்கிய கறுப்புநிற பாடசாலை பாக் (நீலநிறத்துணியால் அடையாளமிடப்பட்டது)

ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

த தர்மராசா
அண்ணா சனசமூக நிலையம்,
உடுவில் கிழக்கு.

(84058)


## கல்விக் கல்லூரி அனுமதி: யாழ். மாணவர்கள் குறித்த திகதியில் செல்ல முடியாத நிலை

தென்மராட்சி, பெப் 12

மட்டக்களப்பு, வவுனியா ஆகிய தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட புதிய மாணவர்களை எதிர்வரும் 22 ஆம் திகதி காலை 8. 30 மணிக்கு பதிவுகளை மேற்கொள்ளுமாறு அந்தந்தக் கல்வியியல் கல்லூரிகளின் பீடாதிபதிகள் அறிவித்துள்ளதால் இக்கல்லூரிகளில் பயிலுநர்களாகத் தெரிவு செய்யப்பட்ட யாழ். மாவட்ட மாணவர்கள் இந்தக் குறுகிய கால இடைவெளிக்குள் பயண ஒழுங்குகளை மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளனர்

யாழ். மாவட்டத்திலிருந்து இந்தக் கல்லூரிகளில் பயிற்சி நெறியைத்தொடர நூற்றுக்கு மேற்பட்டோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்த மாணவர் அனுமதியின் போது பெற்றோர்அல்லது பாதுகாவலர் பங்குபற்ற வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. பயிலுநருடன் மேலும் ஒருவர் செல்ல வேண்டியுள்ளதால் சுமார் 200 - க்கும் மேற்பட்டோரின் பயண ஒழுங்கினை துரிதகதியில் வழங்க யாழ். அரச அதிபர் அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து உரிய காலத்தில் இந்த மாணவர்கள் பயணம் செய்ய ஏற்பாடு செய்யப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(ஐ-117)

## கந்தரோடையில் தெரு நாய்களை அழிக்கும் நடவடிக்கை

வலிகாமம், தெற்கு, பெப். 12

கந்தரோடைக்கிராமத்தில் கட்டாக்காலி நாய்களை நஞ்சூட்டி அழிக்கும் நடவடிக்கை சுன்னாகம் பொதுச்சுகாதார பரிசோதகர் நிலையத்தினரால் இன்று திங்கட்கிழமை மேற்கொள்ளப்படும்.

கந்தரோடை கிராமத்தில் உள்ள இக்கிராமை மற்றும் ஸ்கந்தா முகாம் பகுதி போன்ற இடங்களில் நாய்கள் நஞ்சூட்டி அழிக்கப்படும்.

அதேவேளை — சுன்னாகம் நகரசபைப் பகுதி, மருதனார் மடம் பகுதி போன்ற இடங்களில் இம்மாதம் 26 ஆம் திகதி திங்கட்கிழமை தெரு நாய்கள் ஒழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

நாய்களை நஞ்சூட்டி அழிக்கும் காலங்களில் வளர்ப்பு நாய்களை கட்டிவைத்து பராமரிக்குமாறு பொதுச்சுகாதார பரிசோதகர் அறிவித்துள்ளார்.

(க-152)

## பாஷையூரில் மீளக்குடியமர்வு

அரியாலை, பெப். 12

பாஷையூர் பகுதியில் மக்கள் மீளக்குடியமர்ந்து வருகின்றனர். அந்தோனியார் ஆலயத்திற்கு முன்பக்கமாக கணிசமான மக்கள் தற்போது மீளக்குடியமர்ந்துள்ளனர்.

அதேசமயம் அந்தோனியார் ஆலயத்திலும் செவ்வாய், ஞாயிறு தினங்களும் ஆராதனை வழிபாடுகளும் இடம்பெற்று வருகின்றன.

சென். அன்ரனிஸ் மகளிர் வித்தியாலயமும் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது ஆனால்மாணவர்களின் வரவு மிகக் குறைவாகவே காணப்படுகிறது.

(க –17)


### தேவை

யாழ். மருத்துவ சங்கத்தின் ( J M. A. )
நூலகர் பதவிக்கு

பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவு திகதி: 21—02—2001

சம்பள விபரம் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:-
டாக்டர் சி. முகுந்தன்
செயலாளர்
யாழ். மருத்துவ சங்கம் ( J. M. A. ),
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

(84059)


## கசிப்பு விற்பனை செய்த இருவருக்கு அபராதம்

வலி.வடக்கு, பெப். 12

சட்டவிரோதமான முறையில் கசிப்பு விற்பனை செய்த இருவரை 4 ஆயிரத்து 500 ரூபா குற்றப்பணம் செலுத்துமாறு மல்லாகம் நீதிமன்றத்தினால் உத்தரவிடப்பட்டது.

புத்தூர் வடக்கைச் சேர்ந்த க. சிவயோகம் என்பவர் 4 போத்தல் கசிப்பு வைத்திருந்ததற்காகவும், இதே இடத்தைச் சேர்ந்த சேயோன் சூரியநாதன் 2 போத்தல் கசிப்பு வைத்திருந்ததாகவும் இவ்வாறு குற்றப்பணம் அறவிடப்பட்டது.

அச்சுவேலிப் பொலீஸார் குறிப்பிட்ட இருவரையும் கைது செய்து மல்லாகம் நீதிமன்றில் ஆஜர்செய்தனர்.

# கிழக்கில் அதிரடிப்படை முழு உஷார் நிலையில்!

மட்டக்களப்பு,பெப்.12

கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகள் தொடுக்கும் எந்தத் தாக்குதல்களையும் முறியடிக்கும் வகையில விசேட அதிரடிப் படையினர் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

- இவ்வாறு தெரிவித்தார் கிழக்கு மாகாண விசேட அதிரடிப் படையின் நடவடிக்கைப் பணிப்பாளர் பொலீஸ் அத்தியட்சகர் சரத் சில்வா.

தென் இலங்கைச் செய்தியாளர் குழுவொன்று நேற்று முன்தினம் மட்டகளப்புக்கு விஜயம் செய்து அங்குள்ள பாதுகாப்பு நிலைமை குறித்து பொலீஸ் அத்தியட்சகருடன் கலந்துரையாடியது.

இந்தக் கலந்துரையாடலின் போதே பொலீஸ் அத்தியட்சகர் சரத் சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தின் பாதுகாப் புக் குறித்து கூடிய கவனம் செலுத்தப்படுகிறது. அதிரடிப் படையினர் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் அனைத்துக்கும் பொதுமக்கள் தமது ஆதரவை வழங்கி வருகின்றனர்.

அதிரடிப் படையினர் மக்களின் குறைகளைக் கேட்டறிந்து அவற்றைத் தீர்க்கும் வகையில் செயற்பட்டுவருகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

(ஐ-7)

# பச்சிளங் குழந்தையின் உடலில் இணைந்து வளர்ந்த உயிர்க்கரு!

## சத்திர சிகிச்சை மூலம் அகற்றப்பட்டது

பிறந்து ஒன்றரை மாதமே ஆன ஆண் சிசுவின் நெஞ்சுப் பகுதிக்குள் இருந்த கரு சத்திர சிகிச்சை மூலம் அகற்றப்பட்டது.

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப் பிரதேசத்தில் வசித்த மரியதாஸ் ஞானமலர் என்பவரின் 3 ஆவது குழந்தையே கருவுடன் பிறந்த அபூர்வ சிசுவாகும்.

பிறந்ததில் இருந்து இந்தச் சிசு மூச்சு விடுவதற்கு சிரமப்பட்டு வந்தது. அத்துடன் போஷாக்குக் குறைபாட்டாலும் பாதிக்கப்பட்டிருந்தது.

அந்தச் சிசுவுக்கு ஏற்பட்டிருந்த சுவாசக் கோளாற்றைக் குணப்படுத்துவதற்காக அக்கராயன் மருத்துவ மனையில் சிகிச்சையளிக்கப்பட்டது.

ஆனால் அங்கு எவ்வித பலனும் கிடைக்காததால், வவுனியா, அனுராதபுரம் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றபோதும் சிசு மூச்சு விடத் தொடர்ந்து சிரமப்பட்டே வந்தது.

சுவாசக் கோளாறுக்கான காரணதையும் மருத்துவர்களால் கண்டு பிடிக்க முடியவில்லை.

இந்நிலையில் கொழும்பு மருத்துவ மனையில் அந்தச் சிசு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டது. சிசு மூச்சுவிட அதிக சிரமப்பட்டதாலும், பரிசோதனைகள் நடத்தி காரணத்தைக் கண்டு பிடிக்கக் கால அவகாசம் இல்லாததாலும் சத்திர சிகிச்சை நடத்தப்பட்டது.

சத்திர சிகிச்சையின் போதுதான் சிசுவின் மார்புக் கூட்டுப் பகுதிக்குள் உயிருள்ள கருவொன்று வளர்வதைக் கண்டு பிடித்த மருத்துவர்கள் அதனை அகற்றினார்கள்.

சத்திர சிகிச்சையை மேற் கொண்ட டாக்டர் வை.குலசேகரா கூறுகையில் - மார்புக் கூட்டுக்குள் 500 கிராம எடையுள்ள கரு இருந்ததாகவும் அது சுவாசப் பைகள், மூச்சுக்குழல் ஆகியவற்றை அழுத்தியதாலேயே குழந்தைக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டதாகவும் - தெரிவித்தார்.

சிசுவின் உடலில் இருந்து அகற்றப்படும் வரை அந்தக் கரு உயிருடன் இருந்ததாகவும் - அவர் கூறினார். இரட்டைக் குழந்தைகளாக தாயின் கருப்பையில் உருவாகிய இரு கருக்களில் ஒன்று பூரண வளர்ச்சியடையும் சமயம் மற்றைய கரு வளர்ச்சி குன்ற நேரிடலாம்.

இத்தகைய சமயத்தில் வளர்ச்சியடைந்த கரு குழந்தையாகப் பிறக்கும் போது, வளர்ச்சி குன்றிய கரு அக்குழந்தையின் உடலுக்குள் பதிந்து, அக்குழந்தையின் உடலில் இருந்தே ஆகாரத்தைப் பெற்று உயிருடன் தொடர்ந்து இருக்கும். ஆனால் இது மிக மிக அபூர்வமாகவே இடம் பெறும்.

இவ்வாறு டாக்டர் குலசேகரா விளக்கமளித்தார்.

7 ஆண்டுகளுக்கு முன்னர் 7 மாதப் பெண குழந்தை ஒன்றின் உடலுக்குள் இருந்த கரு அகற்றப்பட்ட சம்பவம் இடம்பெற்றதை யும் அவர் நினைவுகூர்ந்தார். (ஒ)

# வன்னிக்கான உணவு லொறிகளை இனி இராணுவம் பயன்படுத்தாது!

## படைத்தளபதி உறுதிமொழி

கொழும்பு,பெப்.12

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்கு உணவு அனுப்பும் லொறிகளை இராணுவம் தமது தேவைக்கு பயன்படுத்த மாட்டாது என்றும் அத்தியாவசிய உணவுப் பொருள்களை வன்னிக்கு தடையின்றி அனுப்புவதற்கு அனுமதியளிப்பதாகவும் இராணுவத் தளபதி லயனல் பலகல்ல உறுதியளித்துள்ளார்.

வன்னிப்பகுதியில் உணவுப் பொருள்களின் தட்டுப்பாடு தொடர்பாக ஐ.தே.கவின் யாழ்.மாவட்ட எம்.பி.தியாகராஜா மகேஸ்வரன் நேற்றுக் காலை இராணுவத் தளபதி லயனல் பலகல்லவைச் சந்தித்து விளக்கமளித்தபோதே மேற்படி உறுதியளிக்கப்பட்டுள்ளது.

வன்னிப் பகுதிகளில் உள்ள அரச அலுவலகங்களுக்குத் தேவையான பிளாஷ்டிக் உபகரணங்கள், வாளி மற்றும் சோப் வகைகள் சீப்பு, பெட்டி, தேங்காய் எண்ணெய், குளிர் பானங்கள், பழவகைகள் போன்றவற்றை அனுப்பவும் இராணுவத் தளபதி இணக்கம் தெரிவித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

வன்னிப் பகுதிக்குப் பொருள்களைக் கொண்டு சென்று விற்க விரும்பும் வர்த்தகர்கள் அதற்கான விண்ணப்பங்களை தம்மிடம் அனுப்புமாறு இராணுவத் தளபதி கூறியுள்ளதாகவும் மகேஸ்வரன் தெரிவித்தார்.

வன்னிப் பகுதியில் தற்போது இயங்காத நிலையில் உள்ள லொறிகளைத் திருத்துவதற்கான உதிரிப் பாகங்களை அனுப்பி வைக்கவும் இராணுவத் தளபதி இணங்கியுள்ளார். வன்னிக்கு உணவுகளை அனுப்பும் லொறிகளை இராணுவம் தமது தேவைகளுக்குப் பயன்படுத்தாது என்று உறுதியளித்துள்ள தாகவும் கூறியுள்ளார்.

அவ்வாறு பயன்படுத்தினாலும் ஏழு நாள்களுக்குள் குறித்த லொறிகள் சம்மந்தப்பட்டவர்களிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டுவிடும் என்றும் இராணுவத் தளபதி உறுதியளித்திருக்கிறார்.

மூன்று மாதங்களுக்குள் இராணுவத்திற்குத் தேவையான வாகனங்கள் வந்துவிடும் என்றும் அதன் பினனர் உணவு அனுப்பும் லொறிகள் இராணுவத்தால் பயன்படுத்தப்படமாட்டாது என்றும் உறுதியளிக்கப்பட்டதாகவும் மகேஸ்வரன் மேலும் கூறினார்.

(ஐ)

# அமைச்சர்களின் வருடாந்தச் செலவு 139 கோடி ரூபா

கொழும்பு,பெப்.12

அரசில் அங்கம் வகிக்கும் 44 அமைச்சர்களதும் 38 பிரதி அமைச்சர்களதும் வருடாந்த நிர்வாகச் செலவு 139கோடி ரூபா எனக் கணக்கிடப்பட்டுள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

ஓர் அமைச்சரின் வருடாந்தச் செலவு 224 இலட்சம் ரூபா என்பதோடு பிரதி அமைச்சருக்கான செலவு 107 இலட்சம் ரூபா எனவும் அறிவிக்கப்படுகிறது.

இந்தச் செலவில் பாதுகாப்புச் செலவு, சம்பளம், வாகன எரிபொருள் செலவு, அமைச்சர்களின் உத்தியோகத்தர்கள் செலவு, தொலைபேசிக் கட்டணம் என்பன அடங்காது எனவும் அந்த செலவுகளும் சேர்க்கப்பட்டால் அமைச்சர்களின் செலவு மேலும் அதிகரிக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வருடத்திற்கான வரவு செலவுத் திட்டத்தில் அமைச்சர்களின் நிர்வாகச் செலவுக்கான பணம் ஒதுக்கப்படும் என்பது தெரிந்ததே. அரசின வருடாந்தச் செலவுகள் அதிகரித்துள்ளதால் வரவு செலவுத் திட்டத்தினூடாக வரிகள் அதிகரிக்கப்படும் என நம்பப்படுகிறது. (ஐ)

# மாவட்ட அபிவிருத்திக் குழுக்களுக்கு நான்கு அமைச்சர்கள் தலைமை

கொழும்பு,பெப்.12

மத்திய மாகாணத்தைச் சேர்ந்த கண்டி, நுவரெலியா மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களின் அபிவிருத்திக் குழுக்களின் இணைத் தலைவர்களாக நான்கு அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இவர்களுக்கான நியமனக் கடிதங்களை நேற்றுமுன்தினம் கையளித்தார்.

இதன்படி நுவரெலியா மாவட்டத்தின் இணைத் தலைவராக அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்கவும், கண்டி மாவட்டத்தின் இணைத் தலைவர்களாக அமைச்சர்களான டி.எம்.ஜயரத்தன, ஜெனரல் அனுருத்தரத்வத்த ஆகியோரும் -

மாத்தளை மாவட்ட இணைத் தலைவராக அமைச்சர் மொண்டி கோபல்லாவும் கடமையாற்றுவர்.

மேற்படி மூன்று மாவட்டங்களுக்குமான அபிவிருத்திக்கு குழுக்களின் பொறுப்பாளராக மாகாண முதல் அமைச்சர் சரத் ஏக்க நாயக்க கடமையாற்றுவார்.

(ஐ-7)

## மதகைத் திருத்தக் கோரிக்கை

சண்டிலிப்பாய்,பெப்.12

சங்கானை - வல்லை வீதியில் மாஹறிப்பிட்டி சந்திக்கு அருகில் பிரதான வீதியில் மதகு ஒன்று சேதமடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது. இதனால் இவ்வீதிவழியாக வாகனங்கள் மிகுந்த சிரமத்தின் மத்தியில் செல்ல வேண்டியுள்ளது.

இதனை விரைவில் திருத்துமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

(ஒ-135)

## கல்விச்சாலைக் காட்சிகள்



கல்வியங்காடு இந்து தமிழ்க் கலவன் பாடசாலை பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

பிரதமவிருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் க.குணராசா கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கம் உரையாற்றுகிறார். அதிபர் திருமதி செ.மகாதேவன், உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சுப்பிரமணியம், திருமதி க.குணராசா ஆகியோர் அமர்ந்துள்ளனர். (ஐ)



சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தினமும் நிகழ்வில், வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதநாதன், சங்கானைக் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.செல்லையா ஆகியோர் உரையாற்றுவதை படத்தில் காணலாம்.

*(படம்: சங்கானை செய்தியாளர்.)*



சுவாமி விவேகானந்தரின் ஜயந்தி தினத்தை ஒட்டி அல்வாய் கிழக்கு இந்து தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களுக்கு பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தின் சார்பில் சுவாமி சித்ரூபானந்தா பிரசாதம் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

*(படம்:வடமராட்சி பிரதேச செய்தியாளர்.)*



தெல்லிப்பழை சுகவாழ்வு நிலையத்தினரால் சிறுவர் தினத்தை ஒட்டி நடத்தப்பட்ட விழாவில் இடம்பெற்ற நாடகத்தின் ஒரு காட்சி

(ஐ-86)

# கொடிகாமத்தில் சிரமதானம்

கொடிகாமம் சந்தைப் பகுதி சாவகச்சேரி பிரதேச சபையினரால் கடந்த ஞாயிற்றுக்கிழமை சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது.

சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் அன்ரன் பொன்னையா தலைமையில் பிரதேச சபையின் உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்கள் இந்தச் சிரமதானத்தில் கலந்து கொண்டனர்.

(ஐ-5)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## சேவை

உங்கள் சர்வதேச தொலைத் தொடர்புகளை (IDD) எங்கள் ஊடாக மிக மிகக் குறைந்த கட்டணத்துடன் அழைக்கலாம். தொடர்பு கொள்க. 01-552238. **(C/15233)**

## விற்பனைக்கு

தற்போது வெல்டிங் பாவனையில் உள்ள 6 **KW** சிங்கிள் பேஸ் டைனமோ (ஒறிஜினல் அல்ல) ஒன்று விற்பனைக்கு உண்டு. 109, சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (84028)

## திருமண சேவை

இந்து, 1962ஆம் ஆண்டு பிறந்த, படித்த, அழகுள்ள பெண்ணுக்கு சிறந்த குணம் பொருந்திய மணாளனை எதிர்பார்க்கின்றனர். தொடர்பு: ராகவேந்திர ஆலயம், நல்லூர், யாழ்ப்பாணம். (84030)

## இலக்கியக் கட்டுரைகள்

10-11ஆம் தரங்களில் தமிழ் இலக்கியத்தை இலகுவாகக் கற்கவும், கற்பிக்கவும் சிறந்த நூல். சிறுகதைகள், நாடகங்கள், நாவல் எல்லாவற்றிற்கும் விளக்கங்கள் எழுதியுள்ளார், அவை எல்லாவற்றையும் எழுதிய அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை.(83570)

## தவறிவிட்டது

தம்பிராசா இராணியம்மா என்பவருடைய விசேட அடையாள அட்டை (இல.0902016565) 07.02.2001 இல் அரியாலைக்கும் ஆவரங்காலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் **N0.7** பெந்தகோஸ் வீதி, அரியாலை என்னும் முகவரியில் ஒப்படைக்கும்படி பணிவாகக் கேட்டுக் கொள்கிறேன். (84055)

## இதோ வெளிவந்துவிட்டது

உங்கள் வாழ்விற்கு வழி காட்ட வெளிவந்து விட்டது. **2001/2002** புத்தாண்டின் பலாபலன்கள், வக்கிர சனீஸ்வர மாற்றம், 2001 உங்களுக்கு எப்படி? வேலணை சோதிடர் **V.A.**சிவராசா வெளியிட்டது என்று கேட்டு வாங்குங்கள். எங்கும் விற்பனையாகின்றது. பன்னிரு ராசிகளின் பூரணமான பலன்கள் உள்ளன. (84057)

## நீரிழிவு மாத்திரை தட்டுப்பாடு

சண்டிலிப்பாய்,பெப்.12

தெல்லிப்பழை அரசினர் மாவட்ட வைத்தியசாலையில் நீரிழிவு நோய்க்கு பயன்படுத்தப்படும் 'டயோனில்' குளிசைக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. (ஐ-135)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
11
-
01
-
1979



மறைவு
12
-
02
-
2000

## அமரர் இரவீந்திரன் சுரேஸ்குமார்

(மருத்துவ பீட 21ஆம் அணி மாணவன்)

கா மலர்ந்தது போல் சிரித்ததும்
கனிய தென்றலாய் நீ திரிந்ததும்
பூ விதழினை ஒத்த மென்மையில்
புன்னகையால் நீ எம்மைக் கரைத்ததும்
தே னினித்திடும் உந்தன் பேச்சதும்
திங்கள் நிகர்த்திடுமுன் வதனமும்
நீ மறைந்திட நினைவில் ஒழியுமோ?
நீள் விழியதனில் நீர் பெருகுமோ?
கா லமாண்டென ஓடி மறையலாம்
கண்ட நண்பனே! எம் நெஞ்சிலிருக்கிறாய்!

**21 ஆம் அணி மாணவர்கள்,**
**மருத்துவபீடம்.**

(84051)

# அந்தியேட்டி, சபிண்டீகரண அழைப்பு

தோற்றம்
23
-
03
-
1980



மறைவு
01
-
11
-
2000

செல்வன்

## சிவபாலசிங்கம் வேலவமூர்த்தி

01-11-2000 அன்று அமரத்துவமடைந்த எமது அன்புக் குமாரன் செல்வன் சிவபாலசிங்கம் வேலவமூர்த்தி அவர்களின் ஆத்ம சாந்திக் கிரியைகள் நாளை (13-02-2001) செவ்வாய்க்கிழமை பொலிகண்டியிலுள்ள எமது இல்லத்தில் நடைபெறவுள்ளன.

காலை 6 மணிக்கு அந்தியேட்டிக் கிரியைகள் நடைபெற்று அஸ்தி கந்தவன சமுத்திரத்தில் சேர்க்கப்படும். பகல் 11 மணிக்கு சபிண்டீகரண கிரியைகள் நடைபெற்று 12.30 மணியளவில் மதியபோசனம் நடைபெறும். இக்கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

*ஆலடி,*
*பொலிகண்டி.*

(83979)

சி.சிவபாலசிங்கம்
*(கிராமஅலுவலர்: பொலிகண்டி)*
குடும்பத்தினர்.

## மாதாந்த உதவிப்பணம்

சண்டிலிப்பாய்,பெப்.12

தென்மராட்சி பிரதேசத்திலிருந்து பண்டத்தரிப்புப் பகுதியில் இடம் பெயர்ந்து வசித்து வரும் பொதுசன மாதாந்தக் கொடுப்பனவு பெறுபவர்களுக்கான ஜனவரி, பெப்ரவரி மாதங்களுக்கான கொடுப்பனவு பண்டத்தரிப்பு தபால் அலுவலகத்தில் வழங்கப்பட்டு வருகின்றது.

உரியவர்கள் வந்து பெற்றுக் கொள்ள முடியும் என்று பணடத்தரிப்பு தபால் அதிபர் தெரிவித்தார். (ஐ-135)

## பொன்னம்பலத்தின் சிலைக்கு மலர் அஞ்சலி

குருநகர் பெப்.12

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி ஸ்தாபகர் அமரர் ஜி.ஜி. பொன்னம்பலத்தில் 24 ஆவது நினைவு தினமான கடந்த வெள்ளி அன்று குருநகர் கடற்கரை வீதியில் அமைந்துள்ள அன்னாரின் சிலைக்கு தமிழ்க் காங்கிரஸ் கட்சியினர் மலர் மாலைகள் சூட்டி அஞ்சலி செலுத்தினர்.

இந்நிகழ்வில் கட்சியின் ஆதரவாளர்களும் கலந்து கொண்டனர். (ஐ-51)

## மானிப்பாய் யுவதிகளுக்கு இலவசப் பயிற்சி

சண்டிலிப்பாய்,பெப்.12

மானிப்பாய் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் அண்மையில் ஆரம்பித்துள்ள அப்பியாசக் கொப்பி, சி.ஆர்.கொப்பி உற்பத்தி தொழில் நிலையத்தில் இப் பகுதியைச் சேர்ந்த யுவதிகள் இலவச பயிற்சி பெறுவதற்கு அனுமதி பெற முடியும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இங்கு இலவசமாகப் பயிற்சி பெற விரும்பும் யுவதிகள் சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு சங்கத் தலைவர் சி.பொ.வ.ம.க. முதலியார் தெரிவித்துள்ளார்.

இதே வேளை -

இத் தொழில் நிலையத்திற்குத் தேவையான தளபாடங்களை பெற்றுக்கொடுப்பதற்கு சண்டிலிப்பாய் பிரிவு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் க.ஸ்ரீபதி நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றார். (ஐ-135)

## நூலகத்தில் வாசிப்புப் பகுதி

வலி. தென்மேற்கு பிரதேச சபைப் பண்டத்தரிப்பு கிராம உப அலுவலக, பொது நூலகத்தில் மாணவர்களின் நலன்கருதி வாசிப்புப் பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்நூலகத்தில் ஜி.சீ.ஈ. சாதாரண, உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு பயன்படும் நூல்களும் உள்ளன.

இதேவேளை -

இந்த நூலகத்தில் நூல்கள் இர வல் வழங்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படடது. (ஐ-135)

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

"சமூகஜோதி"



**அமரர் சிவா இராஜேந்திரன்** (சட்டத்தரணி, **J.P**)

(பட்டினசபை, பிரதேசசபை, சைவபரிபாலனசபை, மானிப்பாய் கோவில் பற்று முன்னேற்றச் சங்க முன்னாள் தலைவர், வேலக்கைப் பிள்ளையார் ஆலய தர்மகர்த்தா)

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 02-04-1913 | 09-02-1996 |

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த வானிலுறை தெய்வமே!
ஆண்டோ ஐந்து நம்மனதில் வேதனையோ விலகவில்லை
வளமாக வாழ்கின்றோம் ஆனால் வழிசமைக்க நீங்களோ இங்கில்லை
விழிகள் தேடும் இடமெல்லாம் உங்கள் விம்பந்தான் தெரிகிறது.


**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

*"சிவவில்லா"*
*மானிப்பாய்.*

(84033)

# நினைவஞ்சலிகள்

| 31ஆம் நாள் | 7ஆம் ஆண்டு |
|---|---|



| அமரர் கந்தையா மகேசன் | | திருமதி மகேசன் மாணிக்கம் |
|---|---|---|
| 1920-03-06 | ← தோற்றம் → | 1918-09-12 |
| 2001-01-13 | ← மறைவு → | 1994-10-10 |

அம்மா, அப்பா.......

அன்னையை இழந்து ஏழாண்டுகள் கண்ணீரில் மிதந்தோம். தந்தையை இழந்து ஒரு மாதம் மீளாத்துயர் அடைகின்றோம். அன்புத் தெய்வங்களை என்றும் நினைந்துருகி அஞ்சலிக்கின்றோம்.

தகவல்:
திரு.திருமதி சின்னையா சரஸ்வதி
***42/1,** நொத்தாரிஸ் வீதி,*
*அரியாலை மேற்கு,*
*யாழ்ப்பாணம்.*

பிள்ளைகள்:
செல்வரத்தினம், பரிமளசிங்கம்
(கல்வித் திணைக்களம், வவுனியா),
இராசரத்தினம் (ஜேர்மனி),
ஸ்ரீதரன் (சுவிஸ்), ஸ்ரீரங்கன்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

* அன்னாரின் விசேஷ ஞாபக ஆராதனை நேற்று (11.02.2001) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு இல.21, கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள எக்காளத் தொனி பூரண சுவிசேஷ சபையில் நடைபெற்றது. (83983)

ஓம் ஸ்ரீராம் ஜெய்ராம் ஜெய்ஜெய்ராம்

# ஆனந்தசாகரம் தெய்வீக நிலையம் - திறப்பு விழா மலர்

## எழில்மிகு சிற்ப வேலைகளுடன் மிளிரும் ஆனந்தசாகரம் நிலையம்

ஆனந்தசாகரம் என்ற பெயரில் ஒரு தெய்வீக நிலையம் பம்பலப்பிட்டி-42, சிறபறி கார்டன்ஸில் அமைந்திருக்கிறது. எழில்மிகு சிற்ப வேலைகளுடன் கடலை நோககிய வண்ணம் இந்நிலையம் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது.

இந்நிலையம் பிரார்த்தனை மண்டபம், அறநெறிநூலகம், தங்குமிடவசதிகள் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது.

இலங்கையில தவத்திரு சுவாமி இராமதாஸ் அவர்களின் ஆத்மீகப்பணிகளை முன்னெடுத்துச் செல்லும் நன்னோக்குடன், சுவாமி இராமதாஸ் பவுண்டேஷன் என்ற அமைப்பு இதனை நிறுவியுள்ளது.

சுவாமி இராமதாஸ் ராம நாம ஜபமொன்றையே சாதனையாகக் கொண்டு மிக உயர்ந்த ஆத்மீக அனுபூதியை அடைந்த ஒரு தவசிரேஷ்டர். அவர் பாதங்களைச் சரணடைந்து குருசேவை மூலமும் இடைவிடா நாம ஜபமூலமும் அதே உன்னத நிலையை அடைந்தவர் அன்னை கிருஷ்ணாபாய்.

இவர்களில் நாம மகிமையை மக்களிடையே பரப்பவும், மக்களை இறைநாம வழிபாட்டில் ஈடுபடுத்தவும் 1931 ஆம் ஆண்டில் வட கேரளா கஞ்சன்காடு என்ற இடத்தில் ஆனந்தாஸ்ரமத்தை நிறுவினார்கள். இந்த ஆஸ்ரமத்தில் அதிகாலை முதல் இரவு வரை ஓம் ஸ்ரீராம் ஜெய்ராம் ஜெய் ஜெய்ராம் என்னும் குரு மந்திரம் மக்களால் இடையறாது உச்சரிக்கப்படுகின்றது.

தவசிரேஷ்டர்கள் வாழ்ந்த புனிதஸ்தலம் என்பதாலும் இடையறாது உச்சரிக்கப்படும் இராமநாம மகிமையாலும் ஆனந்தாஸ்ரமம் அங்கு செல்லும் ஆத்மீகயாசர்களுக்கு அமைதியையும், ஆனந்தத்தையும், வழங்குவதோடு இலகுவில் மனம் குவிநது தியானத்தில் திளைக்கவும் வழிவகுக்கினறது.

சுவாமி இராமதாஸ் அவர்கள் தனது உலக யாத்திரையின் போது 1954 டிசெம்பரில் இலங்கைக்கு அன்னை கிருஷ்ணபாய், இன்றைய ஆனந்தாசிரமத் தலைவர் சுவாமி சச்சிதானந்த ஆகியோருடன் வந்திருந்தார்.

சுமார் ஒரு மாதகாலம் இலங்கையில் தங்கியிருந்தபோது பல ஆன்மீக நிகழ்ச்சிகளில் சுவாமி இராமதாஸ் பங்கேற்று அரும்பெரும் ஞான உரைகளை ஆற்றி இருந்தார்.


இவர் ஆற்றிய உரைகள்-Inspired Talks of Swami Ramdas in SriLanka என்ற பெயரில் 12.02.2001 இல் வெளியிடப்படவுள்ளது

ஆனந்தசாகர நிலையத்தை திறந்து வைப்பதற்காக சுவாமி இராமதாஸின் பிரதான சிஷ்யரும் தற்போதைய ஆனந்தாச்சிரமத் தலைவருமான சுவாமி சச்சிதானந்தமகராஜ் அவர்கள் 12.02.2001 இல் கொழும்பு வருகிறார்.

13.02.2001 சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்படும் இந்நிலையம ஆனந்தாசிரமத்தின் வழிநின்று இராம நாம ஜெபம், இராம நாம மகிமையைப் பரப்புதல், நலிவுற்ற மக்கள் நலவாழ் வுக்கான தர்ம கைங்கரியங்கள் போன்ற சன்மார்க்கப் பணிகளுக்கு பயனுள்ள ஊடகமாக விளங்கும். ★

## திறப்பு விழா நாளை

கொழும்பு, பம்பலப்பிட்டி,
சிறபறி கார்டன்ஸ்,
42ஆம் இலக்கத்தில்
அமைந்துள்ள சுவாமி இராமதாஸ்
பவுண்டேஷன் வளாகத்தில்
நாளை செவ்வாய்க்கிழமை
(13.02.2001) ஆனந்தசாகரம்
தெய்வீக நிலையம்
சுவாமி சச்சிதானந்தஜி மகராஜ்
அவர்களால்
திறந்துவைக்கப்படும்.



சுவாமி
சச்சிதானந்தஜி மகராஜ்

## POWER OF THE NAME



The only precious Thing in this world, by the possession of which we could attain an exalted state of pure peace and joy, is the Name of the Lord. Its melodious sound, coupled with the pure consciousness of the one Reality which it signifies, frees the mind from all its passions, permitting the outflow of the eternal joy inherent in the soul. The Divine Name purifies the mind of its ego and desires and floods the whole being with light and joy. The Divine Name is a powerful boat that takes man across the whirlpools of life to the haven of his eternal and spiritual nature. His Name transforms man from the human to the Divine. The Divine Name is the one sovereign panacea for all the physical, mental and intellectual ills that have created the sense of diversity and misery in the world. The sweet note that rings out of the Name lulls and grants repose to the troubled spirit of man.

*-SWAMI RAMADAS.*

## நூல் வெளியீடு

சுவாமி இராமதாஸரின்
ஞான உரைகள் அடங்கிய
**'ISPIRED TALKS OF SWAMI RAMADAS IN SRILANKA'**
நூல் இன்று 12.02.2001 இல்
வெளியிடப்படுகின்றது.

## திறப்பு விழா நிகழ்ச்சிகள்

- 13.02.2001 செவ்வாய் மாலையில் திறப்புவிழா நிகழ்வுகள் ஆரம்பமாகும்.
- திறந்து வைப்பவர்: கேரளா, கஞ்சன் காடு ஆனந்தாஸ்ரமத்தின் தலைவர்
  **சுவாமி சச்சிதானந்தஜி மகராஜ்**
- தலைவர்:
  இராமகிருஷ்ண மிஷன் கொழும்புக் கிளையின் தலைவர்
  **சுவாமி ஆத்ம கனானந்தஜி மகராஜ்**
- பிரதம விருந்தினர்:
  இலங்கைக்கான இந்தியத் தூதர்
  **மாண்புமிகு கோபால் கிருஷ்ண காந்தி**
- மாலை 6 மணிக்கு ஆனந்த சாகரம் தெய்வீக நிலைய புதிய கட்டடம் திறந்து வைக்கப்படும்.
- மாலை 6.20 மணிக்கு - தலைவர் உரை
- மாலை 6.30 மணிக்கு - சுவாமி சச்சிதானந்தஜி மகராஜ் அவர்களின் ஆசீர்வாதம்
- மாலை 6.40 மணிக்கு - பிரதம விருந்தினர் உரை.
- மாலை 6.50 மணிக்கு - சுவாமி இராமதாஸ் பவுண்டேசனின் சேவைத்திட்டங்கள் அங்குரார்ப்பணம்.
- இரவு 7 மணிக்கு- பக்திப் பாடல்கள்
- இரவு 7.30 மணிக்கு - ராம நாம பஜனை

"The seen and the unseen are both God, and God alone is and there is nothing but God. It is He alone who is holding inspiring Satsang in one place, doing business in another place, committing so - called crime elsewhere. The moment we see that it is He alone who is acting in these roles, we see nothing good or bad as we are transported to a higher plane of consciousness. Our effort must be only to stay in that plane constantly."

*-Swami Satchidananda*

(C/15252)

## எம்முள் உறையும் இறைவனை நாம ஜபத்தால் உணரலாம்

**நாம்** ஒரு நாமத்தை மீண்டும் மீண்டும் ஜபிக்கும் போது, எம்முள்ளே இருக்கும் ஒருவனின் நாமத்தையே நாம் ஜபிக்கின்றோம் என்ற எண்ணம் எம் மனதில் இருந்தாக வேண்டும். அந்த ஒருவனே நிலை பெற்றவனும், எங்கள் வாழவும் ஆகின்றான்.

இந்த உணர்வு எம்மனதிலே இல்லாவிடின், இந்த ஜபமாவது வெறும் யந்திரமயமான உச்சரிப்பாக அமையுமே தவிர, அதனால எமக்கு ஒருவித பயனும் கிடையாது. நாம் அந்த நாமத்தோடு இணைந்து ஜபிக்கும் போது, நாம் இறையோடு இணைந்தவர்களாகிவிடுகின்றோம்.

எவ்வெப்போதெல்லாம் நாம் ஜபம் செய்கின்றோமோ அவ்வப்போதெல்லாம் நாம் இம்மையக் கருத்தை மனதில் கொள்ளவேண்டும். அப்போது தான் இந்தப் பயிற்சி எம்முள்ளே ஒரு தெய்வீகவுணர்வு பிரசன்னமாயிருப்பதை உணரவைக்கும்.

ஆரம்பத்தில் இந்த உணர்வு எமக்கு ஏற்படாது; ஆனால் நாம் விவேகமான முறையில் எம்முள்ளே இறைவன் உறைகின்றான் என்னும் கருத்தை ஏற்று அவன் திருநாமத்தை ஏற்கின்றோம். மனதளவில் அவனோடு நாம் சார்ந்திருப்பதை உணர்கின்றோம்.

இந்த உணர்வு, நாளடைவில் வளர்ந்து ஓர் அனுபவமாகி, எம்முள் இறையின் சாந்நியத்தை வலியுறுத்துகின்றது. இந்த வகையில் எந்த இறைவனை எம்முள் நாம் காண விளைகின்றோமோ, எவரின நாமத்தை நாம் ஜெபிக்க விரும்புகின் றோமோ அவரின் வியாபகத்தை எம்முள் நாம் உணர்ந்து கொள்ள முடிகின்றது.

இந்த உணர்வு எமக்குக் கிடைத்ததும், நாம் எம்முள் உறையும் இறைவனை உணர்வதுடன் எமக்குப் புறத்தேயும் அவனை உணர்கின்றோம், தொடர்ந்து அவனது சர்வ வியாபகத்தையும் நாம் புரிந்துகொள்ள முடிகின்றது.

இதுவே அந்த நாமத்தின் சக்தி ஆகும். இத்தகைய நாம ஜெபம் நாம் அடைய விரும்பும் தெய்வீக அனுபவத்தைப் பெறுவதற்குச் சிறந்ததும், இலகுவானதுமான வழியாகும்.

இதனையே உலகத்துறவிகளும், சாதுக்களும் எடுத்துக் கூறுகின்றார்கள். புனித நாமத்தை ஜெபித்தவர்கள் தாமும் புனிதமடைவார்கள். இறைவனைத் தியானித்தால் நாமும் இறைவனின் பிரதிமையாகலாம். இறையைத் தியானித்தலும், அவன் நாமத்தைச் செபித்தலும் போதுமானது. ஆத்மீகப் பயிற்சி எதுவாயினும் அதன் நோக்கம், இறையைப் பற்றிய சிந்தனையைத் தொடர்ந்து நினைத்திருத்தலாகும். ஜெபம் இதை அளிக்குமானால் சாதனையையோ, தவத்தையோ நாம் நாடவேண்டிய அவசியமில்லை.

இறை தியானத்தில தொடர்ந்திருக்கவும், ஈற்றிலே இறையோடு இரண்டறக் கலக்கவும் வழிகாட்டும் அனைத்துப் பயிற்சிகளும் ஜபத்திலே அடங்கியுள்ளன எனலாம். எல்லாவற்றையும் விடுத்து இறை பற்றிச் சிந்திக்கும் ஒரே எண்ணம் மட்டும் கொண்டிருத்தலே ஜெபமாகும்.

இறை சிந்தனை மற்றைய எல்லாச் சிந்தனைகளையும் எம்மிடமிருந்து போக்கிவிடும். இந்தச் சிந்தனையும் யாம் இறையோடு இரண்டறக்கலந்து ஒன்றாகும் பக்குவத்தில் அகன்றுவிடும்.

எனவே ஆண்டவனின் சக்தி வாய்ந்த நாமம் உயர்ந்த உண்மைப் பொருளுக்கு ஆன்மாவை இட்டுச் செல்லவல்லது. முதற்கண் எமக்கு வேண்டியது இறை நாமத்தின் மேன்மையிலும் சக்தியிலும் நாம் வைக்கும் முழுமையான நம்பிக்கையே ஆகும். எமக்கு இத்தகைய நம்பிக்கை கிடைப்பது ஆண்டவன் அருளினாலேயாகும்.

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 27 - 09 - 1931

உதிர்வு 23 - 02 - 2000

## அமரர் கந்தமுத்து நடராசா

(சிங்கர் ஆசாரி - காரைநகர்)

திதி: 12.02.2001

ஐயா!


ஆண்டு ஒன்று சென்றாலும்-நாம்
அடுத்த ஜென்மம் எடுத்தாலும்
விட்டுப் பிரியாது உங்கள் நினைவுகள்---
உங்கள் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கும்

மனைவி, மகள்,
மருமகன்,பேரப்பிள்ளைகள்

*பத்திரகாளி கோயிலடி,*
*சுழிபுரம்.*

(84021)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 05 - 01 - 1928

மறைவு 23 - 02 - 2000

## பண்டிதர் ந.கந்தையா

(ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர்)

திதி: 12.02.2001

பாசத்தோடு எங்களை அரவணைத்து பணிபுரிந்து
நல்வழி காட்டிய உத்தமர் என்றும் எங்கள்
காவல் தெய்வமாக இருக்க,
மாவடி விநாயகரைப் பிரார்த்திக்கும்

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

உரும்பிராய் கிழக்கு.

*மீசாலை கிழக்கு.*

(83956)

# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி எலிசபெத் நவரத்தினம்

(ஆசிரியை)

திதி: 12.02.2001

வையத்துப் பலன் செய்தாரைத் தெய்வத்துட் சேர்க்கும்
ஐயமில்லை அவர் தம் மக்கள் நற்பயன் பெறுவர்
நின் வாழ்வு
பொய்யாது பொருள் கெடாது ஒளிர்கிறது மண்ணில்
தெய்வத் திருவடியிற் பெறுக சாந்தி தவறாது
பிரார்த்திக்கிறோம்

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**- குடும்பத்தினர்,**
**உறவினர்.**

*'குமரகோட்டம்'*
*மானிப்பாய் வீதி,*
*கோப்பாய்.*

(84002)

## முருகாற்றுப்படை பாராயணம்

தென்மராட்சி,பெப்.12

நாட்டு மக்களின் நன்மை கருதி தென்மராட்சி வித்தகம் நிலையத்தினர் புலோலி உபயகதிர்காமம் முருகன் ஆலயத்தில் திருமுருகாற்றுப்படை பாராயணத்தை கடந்த 9 ஆம் திகதி முதல் ஆரம்பித்துள்ளனர்.

தொடர்ச்சியாக 12 தினங்கள் காலை 8மணி முதல் மாலை 5மணி வரை பாராயணம் வித்தக அன்பர்களால் ஓதப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-31-117)

## தபாலகம் செல்வோர் சிரமம்

வலி வடக்கு,பெப்.12

மல்லாகம் உபதபால் நிலையத்தில் தபால் பொதிகளை நிறுப்பதற்கு வேண்டிய தராசு இன்மையால் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை அடைகின்றனர்.

தபால் நிலையத்திற்கு பொதிகள் அனுப்ப வருபவர்கள் அருகிலுள்ள கடைகளில் அவற்றை நிறுத்து வந்து கூறும்படி பணிக்கப்படுகின்றனர்.

வாடிக்கையாளர் தமது பொருளகளை கடைக்காரர்களின் உதவியுடன் சென்று அனுப்ப வேண்டிய நிலைமை காணப்படுகின்றது. (ஐ-86)

## பண்டத்தரிப்பு புனித பற்றிமா ஆலய நிர்மாணப் பணிகள்

யாழ்ப்பாணம்,பெப்.12

பண்டத்தரிப்பு புனித பற்றிமா ஆலய அன்னை யாத்திரை ஸ்தலம் முற்றிலும் புதிதாக நிர்மாணிக்கப்படுகிறது.

72 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள இக்கட்டடத்திற்கான அடிக்கல்லை யாழ்.ஆயர் அண்மையில் நட்டுவைத்தார்.

அடித்தள வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த வேளையில் அனைத்து பங்கு மக்களையும் சிரமதானப் பணியாற்ற பங்குத் தந்தை அழைப்பு விடுத்துள்ளார். (க-15)

## ஆசிரியர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.12

இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்கத்தின் நல்லூர் கிளையின் செயற்குழுக் கூட்டம் நாளை செவ்வாய் பிற்பகல் 4 மணிக்கு நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலையில் நடைபெறும். செயற்குழு அங்கத்தவர்களை இதில் கலந்து கொள்ளுமாறு நல்லூர்க் கிளையின் செயலாளர் சுந்தரலிங்கம் கோகிலன் கேட்டுள்ளார். (ஐ)

## குடாநாட்டில் புதுவித கண்நோய்

யாழ்ப்பாணம்,பெப்.12

யாழ்.குடாநாட்டில்,ஒருவித கண்நோய் தீவிரமாகப் பரவிவருவது யாழ்.ஆஸ்பத்திரியின் கண்பரிசோதனைப் பிரிவில் இருந்து அறியப்படுகிறது.

சாதாரண கண் நோய் 3 நாள்களில் அல்லது ஒரு வாரத்திற்குள் சிகிச்சையின்றி மாறும் தன்மை வாய்ந்தது.

தற்போது பரவ ஆரம்பித்துள்ள இந் நோய் கண்களைச் சுற்றி, சொறியுடன் கூடிய சிறு சிறு பருக்களுடன் தோன்றி நீடித்த நாள்களுக்குப் பின் குணம் அடைகிறது.

சுமார் ஒரு மாத காலத்திற்குக் கூட இந் நோய் நீடிப்பதாகவும், இந் நோய் கண்டவர்கள், ஆரம்ப காலத்திலேயே கண் கிளினிக்கில் சிகிச்சையைப் பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும், கண் சிகிச்சைப் பிரிவு வட்டாரத்தில் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-15)

## இரு பாடசாலைகள் புதிய இடத்தில்

தென்மராட்சி,பெப்.12

இடம்பெயர்வின் பின்னர் வடமராட்சிப் பகுதிப் பாடசாலைகளில் மாலை நேரப பாடசாலைகளாக இயங்கி வந்த தென்மராட்சிப் பாடசாலைகள் சில இன்று திங்கட்கிழமை முதல் பின்வரும் இடங்களில் காலை நேரப் பாடசாலைகளாக இயங்கவுள்ளதாக வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

பொலிகண்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் மாலை நேரப் பாடசாலையாக இயங்கி வந்த அல்லாரை அ.த.க. பாடசாலை கொற்றாவத்தை 'எய்ரடி சேர்க்கிள்' கல்வி நிலையத்தில் காலை நேரப் பாடசாலையாக தரம் 1 தொடக்கம் 11 வரை வகுப்புகள் நடைபெறும்.

தம்பசிட்டி மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் மாலை நேரப் பாடசாலையாக இயங்கி வந்த குடமியன் ஆ.த.க. பாடசாலை தம்பசிட்டியில் இயங்கும் போரூட் நிறுவனத்தில் காலை நேரப் பாடசா லையாக தரம் 1 தொடக்கம் தரம் 9 வரை வகுப்புகள் நடைபெறும். (ஐ-117)


# YOGI HOME SCIENCE ACADEMY

**குறுகிய கால புதிய வகுப்புக்கள் 19.02.2001 முதல் ஆரம்பமாக உள்ளன.**

1. முக ஒப்பனை, நவீன தலை அலங்காரங்கள், மணமகள் அலங்காரங்கள்.
2. இந்தியன், கண்டியன், குஜராட்டி, மடிசார் போன்ற வித்தியாசமாக சாறி அணியும் முறைகள்.
3. பூக்கள் தயாரித்தல், அலங்கரித்தல், செண்டுகள் செய்தல்.
4. துணியில் வர்ண அலங்கரிப்பு. (Fabric Painting and Saree Painting)

ஏனைய மனையியல் வகுப்புக்களும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

**சேர விரும்பும் மாணவிகள் உடன் தொடர்பு கொள்ளவும்.**

மேலும் சகல ஒப்பனைப் பொருள்களும் கிறீம் வகைகளும் எம்மிடம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 75, அம்மன் றோட், நல்லூர், யாழ்ப்பாணம்.

(84023) *(வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக)*


# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 22 - 01 - 1928

மறைவு 09 - 02 - 1996

## அமரர் சதாசிவம் கனகலிங்கம்

திதி: 12.02.2001

அன்புத் துணைவராய் பாசமிகு தந்தையாய்
எமக்கு நல்வழிகாட்டிய அன்புத் தெய்வமே!
நீங்கள் மறைந்து ஐந்து ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் அன்பு நினைவலைகள் எம்மை விட்டு நீங்காது!

- குடும்பத்தினர்.

*நவரத்தினராஜா வீதி,*
*கோண்டாவில்.*

(83978)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 27 - 12 - 1927

மறைவு 13 - 01 - 2001

## திருமதி சிவபாக்கியம் கந்தையா

(வட்டுக்கோட்டை)

அன்பின் திருவுருவே! அகல் விளக்கே! - எம் அம்மாவே!
மருமக்கள் எம்மை மகிழ்ச்சியுடன் வரவேற்ற - மாண்புமிகு மாமியே!
பேரப்பிள்ளைகள் எங்கள் மீது பேரன்பு காட்டிய - அன்பு அம்மம்மாவே! அப்பம்மாவே!
பூட்டன் பிறந்து விட்டான் என்று சொல்லிப் பூரிப்படைந்த - அன்புப் பூட்டியே!
எம்முடன் பாசத்துடன் கதைத்துச் சில நிமிடங்களில் நீங்கள் சிவன் பாதம் சேர்ந்து விட்டீர்கள்!

அன்னாரது வீட்டுக் கிருத்திய கிரியைகள் இன்று (12.02.2001) திங்கட்கிழமை நடைபெறும். தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் ,
பூட்டப்பிள்ளை.

*"குமரவேல்"*
*சங்கரத்தை வீதி,*
*வட்டுக்கோட்டை.*

(84034)

## காஷ்மீர் பழங்குடிகளின் கிராமத்தை

# முஸ்லிம் தீவிரவாதிகள் தாக்கியதில் குழந்தைகள் உட்பட 15 பேர் பலி!

ஸ்ரீநகர், பெப்ரவரி 12

**காஷ்மீரின் ரஜோரி மாவட்டம் கோச்சாவல் கிராமத்தில் இஸ்லாமியத் தீவிரவாதிகள் பெண்கள், குழந்தைகள் உட்பட 15 பழங்குடியினரைச் சுட்டுக் கொன்றனர்.**

நேற்று முன்தினம் அதிகாலை கோச்சாவல் கிராமத்துக்குள் நுழைந்த தீவிரவாதிகள், கிராமப் பாதுகாப்புக் குழுவின் தலைவரின் வீட்டைப் பூட்டிவிட்டு, வீட்டுக்குள் கிரனைட்டுகளை வீசியதுடன் சரமாரியாகச் சுட்டனர்.

இத்தாக்குதலில் பாதுகாப்புக் குழுத்தலைவர், அவரது மனைவி, மகன், மகள் மற்றும் உறவினர் ஒருவர் ஆகியோர் கொல்லப்பட்டனர்.

அதன் பின்னர் கிராமத்துக்குள் கண்மூடித்தனமாகத் துப்பாக்கிச் சூடு நடத்திய தீவிரவாதிகள் அங்கிருந்து தப்பிச் சென்றனர்.

தீவிரவாதிகளின் தாக்குதலில் 3 பெண்கள் மற்றும் 7 குழந்தைகள் உட்பட 15 பேர் கொல்லப்பட்டுள்ளதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

இறந்தவர்கள் அனைவரும் ''பகேர்வால்'' எனப்படும் பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர்கள்.

சமீபத்தில் ஸ்ரீநகர் அருகே சீக்கியர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதையடுத்து, கோச்சாவல் கிராம மக்கள் பாதுகாப்புக்குழு ஒன்றை அமைத்திருந்தனர்.

அந்தக் குழுவினருக்கு இராணுவம் ஆயுதங்களை வழங்கியிருந்தது.

இந்த ஏற்பாட்டினால் ஆத்திரமடைந்த இஸ்லாமியத் தீவிரவாதிகளே இந்தப் படுகொலைகளை நடத்தியதாகப் பொலீஸார் கூறியுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமையன்று ஸ்ரீநகரில் பொலீஸ் தலைமையகத்துக்குள் நுழைந்து தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 8 பேர் உயிரிழந்ததைத் தொடர்ந்து கோச்சாவல் கிராமத்தின மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

காஷ்மீரில் மத்திய அரசு அறிவித்துள்ள தாக்குதல் நிறுத்தம் முடிவடைய இரு வாரங்களே உள்ள நிலையில் தீவிரவாதிகளின் வன்முறைத் தாக்குதல்கள் அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (ஒ-6-7)

## தமிழகத்தில் 3-ம் அணி அமைக்க கம்யூனிஸ்டுகள் கடும் எதிர்ப்பு!

அ. தி. மு. காவுடன் பாட்டாளி மக்கள் கட்சி கூட்டுச் சேர்ந்ததால், தமிழ் நாட்டிலும் பாண்டிச்சேரியிலும் 3 ஆவது அணி ஒன்றை உருவாக்கும் தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர்கள் சிலரது யோசனைக்கு கம்யூனிஸ்ட் கட்சிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

எதிர்வரும் சட்டப் பேரவைத் தேர்தலில் தி. மு. க. பா. ஜ. க. கூட்டணியை எதிர்த்து, மதச்சார்பற்ற கட்சிகள் ஒன்றுபட்டுப் போராட வேண்டும் என்றும் கம்யூனிஸ்ட் தலைவர்கள் கோரியுள்ளனர்.

காங்கிரஸும், த. மா. கவும், அ. தி. மு. க. கூட்டணியிலிருந்து வெளியேறி 3 ஆவது அணி ஒன்றை உருவாக்கிப் போட்டியிட்டால் மதச்சார்பற்ற வாக்குகள் சிதறும் என்றும் —

இதனால் தி. மு. க. — பா. ஜ. க. கூட்டணிக்கே சாதகமாகும் என்றும், கம்யூனிஸ்ட் கட்சி தெரிவித்துள்ளது.

மார்க்சிஸ்ட் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் ஆகிய இரு இடதுசாரிக் கட்சிகளும் இப்போது அ. தி. மு. கவுடன் கூட்டணி அமைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-6-7)

## இந்திய நிலக்கரிச் சுரங்கத்தில் மேலும் 8 சடலங்கள் மீட்பு!

இந்தியாவின் ஜார்கண்ட் மாநிலத்தில் நிலக்கரிச் சுரங்கத்தில் இருந்து மேலும் 8 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன

கடந்த 2ஆம் திகதி வெள்ள நீர் உட்புகுந்ததால் வெளியேற முடியாமல் உள்ளே சிக்கிய பணியாளர்களை மீட்கும் பணி இறுதிக்கட்டத்தை நெருங்கியுள்ளது.

சுரங்கத்துக்குள் இருந்து சேறு கலந்த நீர் வெளியேற்றப்பட்டதையடுத்து, 8 சடலங்கள் உள்ளே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அந்தச் சடலங்கள் அழுகி, அடையாளம் காணமுடியாத நிலையில் இருப்பதாக மீட்புப்பணி அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவற்றுடன் சேர்த்து இதுவரை 13 சடலங்கள் சுரங்கத்துக்குள் இருந்து மீட்கப்பட்டுள்ளன. ஒரு பணியாளர் மட்டுமே விபத்து நடந்த 3 நாள்களின் பின்னர் உயிருடன் மீட்கப்பட்டார்.

சுரங்கத்துக்குள் 35 பணியாளர்கள் சிக்கியதாக முன்னர் கூறப்பட்டது

இதற்கிடையில், நிலக்கரிச் சுரங்க விபத்துத் தொடர்பாக 4 அதிகாரிகள் பதவிகளில் இருந்து இடைநிறுத்தப்பட்டிருப்பதாகவும் —

பாதுகாப்பற்ற நிலக்கரிச் சுரங்கங்களை மூடிவிட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் —

மத்திய நிலக்கரித்துறை இணை அமைச்சர் முகமட் ஷானவாஸ்கூறினார். (ஒ-6-7)

## மலேசிய அரசு ஏவுகணைக் கொள்வனவு

இஸ்லாமாபாத், பெப். 12

பாகிஸ்தானிடமிருந்து 2 கோடி 90 இலட்சம் ரூபா மதிப்புள்ள ஏவுகணைகள் உள்ளிட்ட ஆயுதங்களை மலேசியா வாங்க உள்ளது

மலேசியப் பாதுகாப்பு அமைச்சரும், பாகிஸ்தானிய இராணுவ ஆட்சியாளர் பர்வேஷ் முஷாரப்பும் இதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளனர்.

மலேசியா ஏவுகணைக் கொள்வனவில் ஈடுபாடு காட்டியிருப்பது இதுவே முதல் தடவை எனக் கூறப்படுகிறது.

(ஒ)

## மார்க் வா மீது விசாரணை

சிட்னி, பெப். 12

அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் மார்க்வா மீதான கிரிக்கெட் சூதாட்ட பேர ஊழல் தொடர்பான விசாரணைகள் நேற்று அவுஸ்திரேலியாவின் மெல்பேன் நகரில் நடைபெற்றது.

சர்வதேசக் கிரிக்கெட் சபை மற்றும் அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை ஆகியவற்றைச் சேர்ந்த புலனாய்வு அதிகாரிகளின் முன் மார்க்வா சாட்சியம் அளித்தார்.

(ஒ)

## கொங்கோவில் விசாரணைக் குழு

கின்சாஸா, பெப். 12

கொங்கோ ஜனநாயகக் குடியரசில் படுகொலை செய்யப்பட்ட அதிபர் லோரன்ற் கபிலாவின் மரணம் தொடர்பாக விசாரணை நடத்த ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

கொங்கோவின் நேசநாடுகளான சிம்பாப்வே, அங்கோலா, நபீபியா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் இந்த ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

மறைந்த அதிபரின் மகனும், தற்போதைய அதிபருமான ஜோசப் கபிலா இதற்கான உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

## கறுப்பினத்தவர் அல்லாத

## இரு நீதிபதிகள் பதவி விலக சிம்பாப்வேயில் வற்புறுத்தல்

ஹராரே, பெப். 12

சிம்பாப்வே உச்ச நீதிமன்றத்தில் கடமையாற்றும் கறுப்பர் இனமல்லாத இரு நீதிபதிகளை பதவி விலகும்படி ஆளும் ஜானுடியத் கட்சி வற்புறுத்தியுள்ளது.

நாடாளுமன்றத்தின் அரசுதரப்பு உறுப்பினர்கள் நீதிமன்றத்தின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றியதையடுத்தே அவர்கள் பதவி விலகக் கோரப்பட்டுள்ளனர்.

வெள்ளையரான நீதிபதி நிக்பட்டாலியும், ஆசியரான நீதிபதி அகமட் இப்ராஹிமும் கெடுதல் எதுவும் நடப்பதற்கு முன்னதாகவே பதவி விலக வேண்டும் என்று நீதித்துறை அமைச்சர் எச்சரித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

சிம்பாப்வேயில் தலைமை நீதிபதியாகப் பதவி வகித்த வெள்ளையர் இன நீதிபதி தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் காரணமாக சமீபத்தில் பதவி விலகியிருந்தார்.

இவரது பாதுகாப்புக்கு தம்மால் உத்தரவாதம் அளிக்க முடியாது என்று அரசு தெரிவித்த பின்னரே அவர் பதவிக் காலம் முடிவடைவதற்கு முன்னதாக ஓய்வு பெற்றுச் சென்றார்.

ஆபிரிக்க நாடான சிம்பாப்வேயில் மண்ணின் மைந்தர்களான கறுப்பர்களை அடக்கி ஆண்ட வெள்ளையர்கள் அந்த நாடு சுதந்திரம் அடைந்த பிறகு கறுப்பர்களின் எதிர்ப்புணர்வுகளை எதிர்கொண்டு வருவதாகக் கூறப்படுகிறது. (ஒ-6-7)

## இஸ்ரேலின் புதிய பிரதமரான

## ஷெரோனை வழிக்கு கொண்டுவர அரபு லீக் ஆலோசனைக் கூட்டம்

மேற்காசியப் பிரச்சினையில் தமக்குள் ஒருமித்த கருத்தை ஏற்படுத்துவதற்காக அரபு லீக் ஆலோசனைக் கூட்டம் ஒன்றை நடத்தியுள்ளது.

அரபு நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்களுடன் பலஸ்தீனப் பிரதிநிதிகளும் இந்த இருநாள் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இஸ்ரேலின் புதிய பிரதமரான ஏரியல் ஷெரோனின் கடும் போக்கினால் மத்திய கிழக்கின் அமைதி குலையக் கூடும் என்றும் —

ஆகவே அரபு நாடுகள் ஷெரோனுக்கு நெருக்குதலைக் கொடுத்து அவரைச் சமாதான வழிக்குக் கொண்டு வரவேண்டும் என்றும் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

மேலும் மேற்குக்கரை மற்றும் காஸாப் பகுதிகளில் இஸ்ரேலிய இராணுவத்தின் தாக்குதல்களில் இருந்து பலஸ்தீனர்களைக் காப்பாற்றுவதற்கு ஐ. நா அமைதிப்படையின் தலையீடு அவசியம் என்றும் அரபு லீக் தெரிவித்துள்ளது.

(ஒ-6-7)

## மத்திய பிரதேச மாநிலத்தில் போலி முதல்வர் அலுவலகம்

புதுடில்லி, பெப். 12

இந்தியாவின் மத்திய பிரதேச மாநிலத்தில் முதலமைச்சர் அலுவலகம் போன்று இயங்கி வந்த போலி அலுவலகத்தைப் பொலீஸார் கண்டுபிடித்துள்ளனர் இது தொடர்பாக 7 பேர் அடங்கிய கும்பல் ஒன்றும் கைது செய்யப்பட்டது.

மாநில முதல்வரின் உத்தியோக பூர்வ முத்திரையுடன் கூடிய கடிதத் தலைப்புகளை திருடிப் பெற்று முதல்வரின் கையெழுத்தைப் போலியாக இட்டு பணி நியமனங்களை இந்தக் கும்பல் வழங்கியுள்ளதாகப் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

கிட்டத் தட்ட முதல்வரின் அலுவலகம் போன்றே இயங்கிய போலி அலுவலகம் மூலம் அரசுத் திணைக்களங்களில் கடந்த 18 மாதங்களில் சுமார் 100 பேருக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் பதவி உயர்வுகள் இடமாற்றங்கள் தொடர்பாகவும் இங்கிருந்து கடிதங்கள் அரசு அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டதாகவும் —

அந்தப் போலிக் கடிதங்களை உண்மை என நம்பிய அதிகாரிகள் அந்தக்கடிதங்களில் காணப்பட்ட உத்தரவுகளை நிறைவேற்றியதாகவும் கூறப்படுகிறது.

(ஒ-6-7)

## அமெரிக்க நீர்மூழ்கி மோதியதில் ஜப்பானியப் படகு பிளந்தது!

### 9 பேரின் நிலை குறித்துக் கவலை

டோக்கியோ, பெப். 12

அமெரிக்க அணுசக்தி நீர்மூழ்கிக்கப்பல் ஜப்பானிய மீன் பிடிக் கப்பலை மோதித் தகர்த்ததில் 9 ஜப்பானியர்கள் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

ஜப்பானிய மாணவர்கள் மற்றும் ஆசிரியர் ஆகியோர் அடங்கிய குழு ஒன்று மீன்பிடிப் படகு ஒன்றில் சென்று கடல் தொடர்பான ஆய்வுகளை நிகழ்த்திக் கொண்டிருந்தது.

அந்தச் சமயத்தில் ஆழ் கடலில்இருந்து யு.எஸ்.எஸ். கிரீன்வில்ட் என்ற அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல் கடல் மட்டத்துக்கு வந்தபோது மீன்பிடிப்படகின்மீது மோதியதில் அந்தப்படகு இரண்டாகப் பிளந்து நீரில் மூழ்கியது.

இதனையடுத்துப்படகில் இருந்த 9 பேர் காணாமல் போயுள்ளனர். அவர்கள் கடலில் மூழ்கி உயிரிழந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

இந்தச் சம்பவத்துக்காக, ஜப்பானிடம் மன்னிப்புக் கோரியுள்ள அமெரிக்கா, விபத்துக்குறித்து விசாரணை நடத்தி வருகிறது.

இரண்டாம் உலகமகா யுத்தத்தின் முடிவில் அமெரிக்கா கைப்பற்றிய ஜப்பானின் ஒகிலோவா தீவில் நிலை கொண்டுள்ள அமெரிக்கப் படைகள் பாலியல் வல்லுறவு உட்பட பல குற்றங்களைப் புரிந்து வருவதாகவும் —

ஆகவே அங்கிருந்து அமெரிக்கப் படைகள் விலக்கப்பட வேண்டும்என்றும்– ஜப்பானிய மக்கள் எதிர்ப்புக் குரல் எழுப்பி வருகிறார்கள்.

இந்தச் சமயத்தில் நிகழ்ந்துள்ள மேற்படி விபத்தினால் அமெரிக்காவுக்கு எதிரான ஜப்பானிய மக்களின் குரல் மேலும் வலுப்பெறும் என்று கருதப்படுகிறது. (ஒ-6-7)

# தமிழரசும் காங்கிரஸூம் தமிழர் கூட்டணியில் சங்கமமாகி விட்டன என்பதே சரித்திர உண்மை

## குமரகுருபரனுக்குப் பதிலளித்து ஆனந்தசங்கரி அறிக்கை

"மறைந்து 24 வருடங்களின் பின் ஜீஜீயை கூட்டணி நினைவு கூருவது குறித்து காங்கிரஸ் புளகாங்கிதம்" என்ற தலைப்பில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் ந. குமரகுருபரன் வெளியிட்ட பத்திரிகைக் குறிப்பு ஒன்றின் சாராம்சம் கடந்த 09 - 02 - 2001 ஆம் திகதிய உதயனில் பிரசுரமாகியிருந்தது. இது குறித்து விளக்கமான பதில் ஒன்றை அறிக்கை வடிவில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மூத்த துணைத் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வி. ஆனந்தசங்கரி அனுப்பி வைத்திருக்கின்றார். அந்த அறிக்கையின் விவரம் இங்கு பிரசுரமாகின்றது.

"மறைந்து 24 வருடங்களின் பின் ஜீஜீயைக் கூட்டணி நினைவுகூருவது குறித்து தமிழ்க் காங்கிரஸ் புளகாங்கிதம்" மேற்படி தலைப்பில் தங்கள் 09-02-2001 தினப் பத்திரிகையில் அக்கட்சியின் செயலாளர் அன்பர் ந. குமரகுருபரன் வெளியிட்ட அறிக்கை எனக்கு ஆச்சரியத்தைக் கொடுப்பதோடு இத் தேவையற்ற சுரண்டல் இக் காலகட்டத்தில் அவருக்குத் தேவைதானா எனக் கேட்கத் தோன்றுகிறது.

தம்பி குருபரனுக்கு இக் கட்டத்தில் சில வரலாற்று உண்மைகளை நான் கூறக் கடமைப்பட்டுள்ளேன். அவருக்கு அவை கசப்பாக இருக்கலாம். ஏனெனில் அந்த நாள்களில் அவர் தமிழ்க் காங்கிரஸ் கட்சியிலேயே இருக்கவில்லை. அமரர் ஜீஜீயின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவனாக நான் இருந்ததுமட்டுமல்ல, 1977 ஆம் ஆண்டு வரை அன்றைய அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் கடைசி நாடாளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளமையால் கட்சி சம்பந்தமான சகல விடயங்களையும் அறிந்திருந்தேன்.

### வரலாற்று உண்மைகள்

தமிழர் விடுதலைக் கூட்டணியை அமைப்பதற்கு முன் தந்தை செல்வா ஜீஜீ அவர்களின் வீடு தேடிச் சென்று சந்தித்ததும், அமரர் ஜீஜீ அவர்களின் சம்மதத்துடனேயே 1976 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டையில் நடைபெற்ற விடுதலைக் கூட்டணியின் மாநில மாநாட்டில் முக்கூட்டுத்தலைமையை அவர் ஏற்றதும், அன்றைய கட்சியின் செயலாளர் சங்கரப்பிள்ளை, மு. சிவசிதம்பரம், தா. சிவசிதம்பரம், முன்னாள் மேலவை உறுப்பினர் எஸ். ஆர். கனகநாயகம், நான் மற்றும் என்னைப் போன்ற தமிழ்க் காங்கிரஸ் ஆதரவாளர்களும் கூட்டணியில் இணைந்து கொண்டதும், ஜீஜீ அவர்கள் அமரத்துவமடைந்து அன்னாரின் பூதவுடல் கட்டுநாயக்கா விமான நிலையம் வந்தடைந்தபோது அவர் பூதவுடலை கட்சியின் அன்றைய தனாதிகாரி காலஞ்சென்ற தா. திருநாவுக்கரசு, காலஞ்சென்ற வழக்கறிஞர் மோதிலால் நேரு ஆகியோருடன் நானும் பொறுப்பேற்று அவர் இல்லத்தில் அஞ்சலிக்கு வைத்துப் பின்பு விசேட விமான மூலம் பலாலி கொண்டு சென்றதும், அங்கே அவரின் பூதவுடலை அமிர்தலிங்கம் பொறுப்பேற்றதையும், பின்பு அவரது பூதவுடல் அஞ்சலிக்கு யாழ்ப்பாணத்தில் வைக்கப்பட்டுப் பின்னர் ஊர்வலமாகப் பருத்தித்துறைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அஞ்சலி உரைகள் அமரர் அமிர்தலிங்கம். அவர்களின் தலைமையில் நடைபெற்ற பின்னர் பருத்தித்துறைக் கடற்கரையில் ஜீஜீயின் பூதவுடல் அக்கினியுடன் சங்கமமானதும் வரலாற்று உண்மைகள். இவற்றை தம்பி குமரகுருபரன் அறிந்திருக்க நியாயமில்லை.

மேலும் 1977 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் அமரர் குமார் பொன்னம்பலம் தனக்கு யாழ்ப்பாணத் தேர்தல் தொகுதிக்கு நியமனம் கேட்டதும், அவர் வட்டுக்கோட்டைத் தொகுதியை ஏற்கமறுத்த பின்பே காங்கிரஸ் கட்சியின் தனாதிகாரியாகிய திருநாவுக்கரசு வட்டுக்கோட்டைக்கு நியமிக்கப்பட்டதும், கோபமடைந்த குமார் யாழ். தொகுதியில் சுயேச்சை வேட்பாளராக போட்டியிட்டு 9291 — அதாவது சுமார் பத்தாயிரம் — வாக்குகள் வித்தியாசத்தில் அமரர் யோகேஸ்வரனிடம் தோல்வியடைந்ததும் வரலாற்று உண்மையே.

### மரியாதை கொடுக்கின்றனர்

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களும் தொண்டர்களும் ஜீஜீ அவர்களுக்குரிய மதிப்பையும், மரியாதையையும் கொடுத்துத் தான் வந்தனர். 'ரயல்-அற்-பார்' (Trial at - Bar)வழக்குக் கூட்டணித் தலைவர்களுக்கு எதிராக நடைபெற்ற போதும் என்றுமில்லாத வகையில் தந்தை செல்வாவை முதன்மைவக்கீலாக வைத்தே ஜீஜீ அவர்கள் அவ்வழக்கில் கலந்து கொண்டு வாதாடினார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியில் தமிழ்க் காங்கிரஸ் கட்சியும், தமிழரசுக் கட்சியும் சங்கமமானதுதான் வரலாற்று உண்மை. ஆனால் இலங்கைத் தமிழ்க் காங்கிரஸூக்கு புத்துயிர் கொடுத்தவர் தமிழ் மக்களில் 'மிகவும் பற்றும் பாசமும்' கொண்ட உலகப் புகழ்பெற்ற தந்திரி ஜே. ஆர். ஜெயவர்த்தன அவர்கள். புத்துயிர் கொடுக்க வைத்தவர்கள் அமரர் குமார் பொன்னம்பலமும் அவரின் தாயாரும். கூட்டணியின் கரங்களில் ஒன்று அன்று முறிக்கப்பட்டது அப்பட்டமான உண்மை. இருப்பினும் கூட்டணியை அவரால் உடைக்க முடியவில்லை.

### களு புத்தாவும் சுது புத்தாவும்

ஆனால் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் புத்துயிர் பெற்றதோடு மட்டும் நின்று விடவில்லை. அமரர் குமார் பொன்னம்பலம் அவர்களை 'களு புத்தா' என்றும், அனுரா பண்டாரநாயக்கவை 'சுது புத்தா' எனவும் மேடைக்கு மேடை திருமதி பண்டாரநாயக்க அவர்கள் உரையாற்றிய வரலாற்றை மறந்துதான் குமார் அவர்கள் சிங்கள வெறிபிடித்த — தமிழ் விரோத — பத்திரிகைகளை வைத்து எம்மை — அதாவது கூட்டணித் தலைவர்களை — தாறுமாறாக விமர்சித்தார்; இழிவுபடுத்தினார். ஆனால் எமக்கு எந்தப் பத்திரிகையும் உதவ முன்வரவில்லை என்பதால் காலத்துக்குக் காலம், வந்த விமர்சனங்களுக்கு பதில் கொடுத்தும் அவை பிரசுரிக்கப்படாத காரணத்தால் அவரின் கருத்துக்கள் - கூற்றுக்கள் யாவும் உண்மைக்குப் புறம்பானவை என்பதை ஊகித்தறியும் ஆற்றல் சாதாரண பொதுமக்களுக்கு ஏற்படவில்லை. இப்படியான வீணான விமர்சனங்களை தற்பொழுது தம்பி குருபரனும் தொடர்கின்றார் போலத் தோன்றுகிறது.

எனது தலைவர் அமரர் ஜீஜீயின் மறைவுக்குப்பின் அவரது மகனால் நாமே விமர்சிக்கப்படும்போது எப்படி எமது காரியாலயத்தில் அமரர் ஜீஜீயின் உருவப்படத்தை வைக்கும் தைரியம் எனக்கு ஏற்படும்? இன்றும் கூட அமரர் ஜீஜீயின் உருவப்படம் — தமிழரசுக் கட்சியில் ஊறிய, ஒரு மாநகர சபை உறுப்பினர் விஜயரத்தினத்தின் சொந்த முயற்சியாலேயே வைக்கப்பட்டது.

### கூட்டணிதானா உங்களுக்குத் தெரிகிறது?

அமரர் ஜீஜீ தான் உயிருடன் இருக்கும் வரை செய்யாத ஒரு செயலைச் செய்து அன்னாரின் இலட்சியத்திற்கு மாறாகச் செயற்பட்டுக் கொண்டு தம்மை அன்னாரின் வாரிசுகளாக வெளிக்காட்டும் ஒரு கூட்டம் எம்மை விமர்சிக்கும்போது வாய்மூடி மௌனியாக இருக்கமுடியாது. அமரர் குமார் — அவர் ஒருவருக்காகவே புத்துயிர் பெற்ற அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியில் ஒட்டிக் கொண்டு, எத்தனை பிரச்சினைகளை எம்மக்கள் எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் இன்றைய இக்கட்டான வேளையில் — அவற்றையெல்லாம் விடுத்து எம்முடன் சுரண்டுவது குமரகுருபரனுக்கு விளையாட்டாக இருக்கலாம். எமக்கு இது விளையாடும் நேரமில்லை. அமரர் ஜீஜீ அவர்களின் புகுந்த வீடு ஊர்காவற்றுறைத் தொகுதி. அமரர் குமார் பொன்னம்பலம் அவர்களின் தாய்ப்பூமி. இன்று அங்கே மக்கள் எதுவித சுதந்திரமுமின்றி அடிமைகள் போல வாழ்கின்றார்கள். அதுபற்றி ஒருவார்த்தை கூட கூறத்தைரியமில்லை எல்லாப் பக்கத்தாலும் நசுக்கப்படும் கூட்டணிதானா இவர்களின் கண்ணுக்குத் தெரிகிறது?

### ஜீஜீயின் முன்மாதிரி

இவர்கள் செய்த ஒரு பச்சைத்துரோகம் பற்றி நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். இச் செயலானது முழுக்கமுழுக்க அமரர் ஜீஜீயின்கொள்கைகளுக்குவிரோதமான செயல்.

1970 ஆம் ஆண்டு தேர்தலுக்குமுன் நான் அமரர் ஜீஜீயிடம் சென்று கண்டிப்பாக மன்னார்த் தொகுதியை வெல்லக்கூடிய ஒரு நபரைச் சிபாரிசு செய்தேன். அவர் ஏற்கவில்லை. நான் அடிவாங்காதகுறை. அவரிடம் வாங்கிய ஏச்சை இன்னும் நான் மறக்கவில்லை. அத்துடன் அவர் என்னிடம் கூறியவார்த்தைகள் இன்றைய காங்கிரஸ் கட்சியின் பிரமுகர்கள் அனைவரையும் தலைகுனிய வைக்கும் என்பதில்சந்தேகமில்லை.

திருகோணமலைத் தொகுதியில் தமிழரசுக் கட்சியுடனுள்ள தன் விரோதம் காரணமாக ஒரு வேட்பாளரை நிறுத்தியிருந்தால் அத்தொகுதி ஒரு பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவருக்கு அல்லது ஐ. தே. கட்சிக்குப் போய்விடும் என்பதால் அப்படி நடக்கக்கூடாது என்று மிகவும் பிடிவாதமாக இருந்தார். ஜீஜீ அவர்கள் அமரத்துவமடைந்த பின்பு அவரது பூதவுடல் அக்கினியுடன் சங்கமமாவதற்கு முன்னிரவு இவ்விடயத்தை நான் தெரிவித்தபோது தந்தைசெல்வா, அமிர் உட்பட அனைவருமே அதிர்ச்சியும், ஆச்சரியமும் அடைந்தனர். அமிரின் கண்களில் கண்ணீர் பனித்ததையும் நான் அவதானித்தேன். அமரர் ஜீஜீயின் மீது அவர்கள் அனைவரும் கொண்டிருந்த மதிப்பு அந்த நிமிடமே பன்மடங்காகியது.

அமரர் ஜீஜீ அவர்களுடன் 10 ஆண்டுகளுக்குமேல் நெருங்கிப்பழகியவன். அவர் இறப்பதற்கு முன்பு ஒருவாரம் அவருடன் தங்கியவன். அவரைப்பற்றி நன்கு அறிந்தவன். அவரின் தீர்க்கதரிசனம் பற்றி எனக்கு உபதேசம் செய்யும் அருகதை தற்போதைய கூட்டணியின் தலைவர் மு. சிவசிதம்பரம் அவர்களைத் தவிரவேறுயாருக்கும்இல்லை.

### புளிச்சல் ஏவறைக்கு இப்போது இடமில்லை

நான் இதை நீடித்துக் கொண்டு போக விரும்பவில்லை. அத்தனைமுக்கியமானதும் அல்ல இவ்விடயம். நம் மக்கள் துன்பத்தில் வாழ்கிறார்கள். இவ்வேளை புளிச்சல் ஏவறைக்கு இடமும் இல்லை. நேரமும் இல்லை. அன்னாரின் இலட்சியம்பற்றி அறியாதவர்கள் இவர்கள். அதனால் தான் இன்று திருமலையில் தம் பிரதிநிதித்துவத்தை தமிழ்மக்கள் இழந்து நிற்கின்றார்கள். இன்னும் பலவிடயங்கள் உண்டு. ஆனால் இறந்தவர்களைப்பற்றி விமர்சிப்பது நன்றல்ல. எனக்கு வேறு பணிகள் பல உண்டு. ஆகவே இத்துடன் இதை நிறுத்திக்கொள்வோம். தம் ஊத்தைகளைப் பகிரங்கப்படுத்தி தங்களைப் பலவீனப்படுத்தாதிருந்தால் மிக்க நன்று. எம்மை நாம் பார்த்துக் கொள்வோம்.

# பாடசாலை மாணவர்களிடையே கதைசொல்லல், எழுதுதல் போட்டி

தென்மராட்சி, பெப். 12

ஐக்கிய இராச்சியத்தின் சிறுவர் பாதுகாப்புப் பிரிவினர் (யுனிசெவ்) யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலை மாணவர்களிடையே கதை சொல்லல், கதை எழுதுதல், பாகம் ஆடல் ஆகிய போட்டிகளைப் பாடசாலை மற்றும் வலய ரீதியில் நடத்தவுள்ளனர்.

சிறுவர் உரிமைகளும் நடைமுறைகளும், சமூக முன்னேற்றத்தில் சிறுவர் பங்கு, சிறுவர் நலன்கள் ஆகிய தொனிப்பொருள்களில் ஒன்றையோ, பலவற்றையோ உள்ளடக்கியனவாக கதைகள் அல்லது பாகம் ஆடல் அமைய வேண்டும்.

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகள் போட்டிகளை பாடசாலை மட்டத்தில் நடத்திய ஒவ்வொரு நிகழ்ச்சிக்கு ஒருவர் வீதம் (பாகம் ஆடலுக்கு மட்டும் ஒருவர் கொண்ட குழு) தெரிவு செய்து எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் வலயக் கல்வி அலுவலகத்துக்கு அனுப்பி வைக்குமாறும் வலய மட்டப்போட்டிகள் எதிர்வரும் 17 ஆம் திகதி காலை 9-30 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறுமெனவும் —

வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். (ம-117)

# ஐ. தே. கவின் போராட்டங்கள் அரசை பதவியிலிருந்து அகற்றா

## மங்கள சமரவீர கூறுகிறார்

கொழும்பு, பெப். 12

ஐக்கிய தேசியக் கட்சியினரின் எந்தவொரு போராட்டமும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவையோ அல்லது அரசாங்கத்தையோ பதவியிலிருந்து இறக்கிவிட மாட்டாது

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் உதவிச் செயலாளரும் அமைச்சருமான மங்கள சமரவீர இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஜனாதிபதியைத் தோற்கடித்துவிட முடியாது என்பதை விடுதலைப் புலிகள் தலைவரே தற்போது ஏற்றுக் கொண்டுள்ளார்.

இந்த நிலையில் எதிர்க் கட்சித் தலைவர் என்ற வகையில் நாட்டு மக்களின் வளர்ச்சிக்காக உழைப்பதே ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரது தார்மீகப் பொறுப்பாகும்—இதை அவர் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இதேவேளை கடந்த ஏழு வருடகாலப் பகுதியில் நாட்டில் நடைபெற்ற பத்துத் தேர்தல்களிலும் ஐக்கிய தேசியக் கட்சி தோல்வி அடைந்துள்ளதையும் மறந்து விடக் கூடாது—என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கல்விக் கல்லூரி அனுமதிக் கடிதம்

மட்டக்களப்பு, வவுனியா ஆகிய தேசியக் கல்வியியல் கல்லூரியில்அனுமதி கிடைத்த யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கான கடிதங்கள் நேற்று முன்தினம் அந்தந்தத் தபால் நிலையங்கள் மூலம் வழங்கப்பட்டன.

தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த அனுமதி கிடைத்த மாணவர்களின் கடிதங்கள் தபால் நிலையங்களில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இம் மாதம் 22 ஆம் திகதி கல்வியியல் கல்லூரியில் பதிவுகள் மேற்கொள்ளப்படுமென கல்லூரிப் பீடாதிபதிகள் அறிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

# காங்கேசன்துறை சிமெந்து ஊழியர்கள் 100 பேருக்கு இடர்காலக் கொடுப்பனவு

## இன்று மொத்தமாக வழங்குவதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம்,பெப்.12

காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபனத்தில் தற்போது கடமையாற்றும் நூறு ஊழியர்களுக்கு கடந்த மூன்றரை ஆண்டு காலத்துக்கான இடர்காலக் கொடுப்பனவு மொத்தமாக இன்று வழங்கப்படவிருக்கிறது.

இந்த ஊழியர்களுக்கு இடர்காலக் கொடுப்பனவு வழங்கப்படாமல் பாரபட்சம் காட்டப்பட்டு வந்ததை ஆட்சேபித்து காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர் கட்டமைப்பு இவ்வளவு காலமும் நடத்திய கடும் முயற்சியின் விளைவாக இக் கொடுப்பனவு வழங்கப்படும் நிலை ஏற்பட்டதாக கூட்டமைப்பின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

இடர்காலக் கொடுப்பனவு தொடர்பான சுற்றறிக்கையின் பிரகாரம் 1996, 1997, 1998 மற்றும் 1999 ஆம் ஆண்டுகளுக்குரிய சகல இடர்காலக் கொடுப்பனவு நிலுவைகளும் இன்று இந்த ஊழியர்களுக்கு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவர் எடுத்த ஆக்கபூர்வமான நிலைப்பாடே ஊழியர்களுக்கு உரிய கொடுப்பனவு விரைவில் கிடைப்பதற்கு உதவியதாகவும் அப்பிரதிநிதி மேலும் தெரிவித்தார்.

(உ)



ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசையை முன்னிட்டு யாழ்.இந்துசமயப் பேரவையினர் நடத்திய மரபுக் கவிதைப் போட்டியில் வெற்றியீட்டிய 'கவிமாமணி' விருது பெற்ற கல்வயல் வே.குமாரசுவாமி, 'கவிமணி' விருது பெற்றவர்களான நாச்சிமார்கோயிலடி சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன், வல்வெட்டித்துறை பண்டிதர் க.முத்துவேலு ஆகியோரையும்- இந்து சமயப் பேரவைத் தலைவர் அளவையூர் அருட்கவி சீ.விநாசித்தம்பிப்புலவர், வித்துவான் சொக்கன், இந்து சமயப் பேரவை உப தலைவர் ஆ.மகாலிங்கம், ஆசிரியர் நடராஜா புகன்ஸ்ரீதரன் ஆகியோரையும் படத்தில் காணலாம். (ஐ)

# தலைநகரில் தமிழர்கள் மீதான இம்சை: கைது தொடர்பாக விளக்கம் தர முடியாத நிலையில் பொலீஸார்

## நீதி அமைச்சர் சுட்டிக் காட்டுகிறார்

கொழும்பு,பெப்.12

விடுதலைப்புலிகள் இயக்க சந்தேக நபர்கள் என்ற பெயரில் கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் படையினராலும் பொலீஸாராலும் தமிழர்கள் கைது செய்யப்படுகின்றனர்.

இத்தகைய கைதுகள் தொடர்பாக முறைப்பாடுகள் கிடைத்ததும் அது குறித்து பொலீஸாரிடம் விசாரித்தால் கைதுக்கான காரணத்தை அவர்களால் தெரியப்படுத்த முடியாத நிலையில் உள்ளனர்.

இவ்வாறு கூறியுள்ளார் நீதி அமைச்சரும், கைதுகள் மற்றும் துன புறுத்தல்களுக்கு எதிரான ஜனாதிபதி குழுவின் தலைவருமான பட்டி வீரக்கோன்.

பொலீஸார், படையினர் ஆகியோருக்கும் பொதுமக்களுக்கும் இடையிலான நல்லுறவு மற்றும் புரிந்துணர்வு தொடர்பான கருத்தரங்கு கடந்த வெள்ளியன்று கொழும்பு சுகததாஸ ஸ்போர்ட்ஸ் ஹொட்டலில் நடைபெற்றது.

அமைச்சர் பட்டிவீரக்கோன் அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அங்கு அவர் கூறியதாவது:-

தமிழ் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டால் அவரை முதலில் விசாரணை செய்யும் புலனாய்வுப் பிரிவினர் அவரது பெயரை வெள்ளைச்சாமி முருகேசு எனச் சொல்வார்கள் பின்னர் விசாரணை செய்யும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் வேலுப்பிள்ளை முருகேசு என அறிக்கை சமர்ப்பிப்பார்கள். இவ்வாறு பெயர்களை மாற்றி மாற்றி பல தரப்பும் விசாரணை செய்வதாலேயே பல தமிழ் இளைஞர்களை நீண்ட காலம் தடுப்புக்காவலில் வைக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.

நாடாளுமன்றத்துக்குச் செல்லும் பாதைகளில் உள்ள தமிழ் குடியிருப்புகள் அடிக்கடி பொலீஸாராலும் படையினராலும் சோதனையிடப்படுகின்றன. இது குறித்துப் பல முறைப்பாடுகள் கிடைக்கின்றன - என்று அமைச்சர் தெரிவித்தார்.

படையினரின் சோதனைகள் தவிர்க்க முடியாததாகவே அமைகின்றன. எனினும் அப்பாவிகள் காரணமின்றிக் கைது செய்யப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது என்பதை அங்கிருந்த சிரேஷ்ட பிரதிப் பொலீஸ்மா அதிபர் கொட்டகதெனியவிடம் அமைச்சர் வீரக்கோன் சுட்டிக் காட்டினார். (ஐ)

# கொழும்பு, திம்பிரிகஸ்யாய பிரிவுகளில் தமிழ் மொழிமூல நிர்வாகம்; ஜனாதிபதி உத்தரவுக்குப் பாராட்டு

கொழும்பு பெப்.12

கொழும்பு திம்பிரிகஸ்யாய பிரதேசச் செயலகப் பிரிவுகளில் தமிழ் மொழி வாயிலான நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது கட்டாயமானது என அரசாங்க வர்த்தமானி மூலம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பிரகடனம் செய்துள்ளமை பெரும் வரவேற்புக்குரியது என்று ஈ.பி.டி.பி அறிவித்துள்ளது. இது குறித்து அந்தக் கட்சி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ்மொழி பேசும் மக்களின் நிர்வாகத் தேவைகளை இலகுவாக்கும் வகையிலான ஜனாதிபதியின் இந்த நடவடிக்கை பாராட்டுக்குரியது. தமிழ்பேசும் மக்களின் அடிப்படை நலன்களைக் கவனத்தில் கொண்டு செயற்படும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி ஜனாதிபதியிடம் விடுத்த வேண்டுகோளை அடுத்து இப்பிரகடனம் வெளியிடப்பட்டமையை மிகுந்த நன்றியுடன் சுட்டிக் காட்டுகின்றோம்.

இவ்வகையில் நாடெங்கிலும் உள்ள தமிழ் மொழி பேசும் மக்கள் கணிசமாக வாழும் இதர பகுதிகளுக்கும் இது விஸ்தரிக்கப்பட வேண்டும் எனவும் பெரிதும் விரும்புகின்றோம்.

கொழும்பு திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகங்களில் தமிழ் மொழி நிர்வாக மொழியாக அமுல்படுத்தப்படுவதானது இனப்பிரச்சினைத் தீர்வு நோக்கிய திசையில் ஜனாதிபதி மேற்கொள்ளும் துணிச்சலான பயணத்தை பறைசாற்றுகின்றது. பிரச்சினைகளுக்கு நிரந்தரமானதும் நியாயமானதுமான தீர்வைக் காணும் செயற்பாடுகளை மேற்கொள்ள அரசாங்கம் இதய சுத்தியுடன் தயாராக இருக்கிறது என்பதையும் எடுத்துக் காட்டுவதாக உள்ளது - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(க)

# அனுமதியின்றி மரம் ஏற்றும் வாகனங்கள் மீது நடவடிக்கை

## நீதிமன்றில் பாரப்படுத்தவும் ஏற்பாடு

யாழ்ப்பாணம்,பெப்.12

யாழ்.மாவட்டத்தில் சட்டபூர்வமான அனுமதிப்பத்திரம் இன்றி மரக்குற்றிகளையோ அல்லது விறகுகளையோ ஏற்றிச் செல்லும் வாகனங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக அந்த வாகனங்கள் நீதிமன்றில் பாரப்படுத்தப்படும் என்று அரச மரக்கூட்டுத்தாபனத்தின் வடமாகாண முகாமையாளர் க.விஜயரட்ணம் தெரிவித்துள்ளார்.

அண்மைக் காலங்களில் யாழ். மாவட்டத்தில் அனுமதிப்பத்திரங்கள் இன்றி மரங்கள் மற்றும் விறகுகளை ஏற்றி வரும் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(க-10-ரி)

# பொருள்கள் சேவைகள் வரிக்குப் பதிலாக மீண்டும் விற்பனை வரியை கொண்டுவர அரசு முடிவு

கொழும்பு,பெப்.12

பொருள்கள் சேவைகள் வரிக்கு (ஜிஎஸ்.ரி) பதிலாக மீண்டும் விற்பனை வரியை நடைமுறைப்படுத்த அரசாங்கம் முடிவு செய்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் முன்வைத்த யோசனைகளை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அமைச்சர் ஒருவரை மேற்கோள்காட்டி கொழும்பு செய்தி வட்டாரங்கள் செய்தி வெளியிட்டன.

பொருள்கள் சேவைகள் வரி காரணமாக மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாவதாக ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியிருந்ததாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.(ம-20)

### புனரமைக்கப்பட்ட பாடசாலை திறப்பு விழா

பருத்தித்துறை, பெப்.12

யுத்த அனர்த்தத்தால் சேதமடைந்து புனரமைக்கப்பட்ட புத்தூர் மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை திறப்பு விழா இன்று திங்கட்கிழமை காலை 7.30 மணிக்கு அதிபர் திருமதி ப.சோதிலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக கோப்பாய் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் நா.வரதராசா, புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா அதிபர் வ.ஆறுமுகம், அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலய அதிபர் கு.பூபாலசிங்கம், வலி.கிழக்கு பிரதேசசபை உப தலைவர் யூ.எல்.ஏ. ரவி ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

கடந்த 1995 ஆம் ஆண்டு படையினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையின் போது முதல் முதல் இப்பாடசாலை பலத்தசேதத்திற்குள்ளானது. இதனால் இப்பாடசாலை இயங்க முடியாத நிலை ஏற்பட்டது. மக்கள் 1996 இல் மீளக் குடியமர்ந்ததும் இப்பாடசாலை தற்காலிகமாக புத்தூர் சோமஸ்கந்த கல்லூரியில் கடந்த ஆறு ஆண்டுகள் இயங்கி வந்தது. (ஐ-118-173)

# விளையாட்டு வினையாகியது சிறுமி பாம்பு தீண்டி மரணம்

யாழ்ப்பாணம்,பெப்.12

விளையாட்டு வினையாகி விடுவதுண்டு.

காலில் முள் குத்தினாலும் பாம்பு கடித்து விட்டது என்று விளையாட்டாக அடிக்கடி கூறிவந்த சிறுமி ஒருத்தி உண்மையிலேயே பாம்பு தீண்டி மரணமானார்.

இச் சம்பவம் நாவாந்துறைப் பகுதியில் இடம் பெற்றது.

அல்வாய் மாலுசந்தி பகுதியைச் சேர்ந்த யோகநாதன் வினுஷா (வயது3) என்ற சிறுமிக்கே விளையாட்டு வினையாகிவிட்டது.

வீட்டின் அருகே விளையாடிக் கொண்டிருந்த சிறுமியைக் காலில் பாம்பு தீண்டியது. வீட்டில் சமையல் வேலையில் ஈடுபட்டிருந்த தாயிடம் ஓடிச்சென்று பாம்பு கடித்து விட்டதாகக் கூறியிருக்கிறாள் அச்சிறுமி. வழமையாக காலில் முள்ளோ, சிறு தடியோ குத்தினாலும் கூட பாம்பு கடித்து விட்டது என்று கூறி வந்ததால் தாயார் அதனைப்பொருட்படுத்தவில்லை. காயத்தைத் துடைத்து விட்டு அவர் சமையல் வேலை யில் ஈடுபட்டார்.

சுமார் 3 மணி நேரத்தின் பின் அச் சிறுமி மயக்கமடையவே அவளை அவசர அவசரமாக ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றனர். ஆனால் அவள் உயிர் பிரிந்து விட்டது பின்னரே தெரிய வந்தது.

மரண விசாரணையின் பின் அந்தச் சிறுமியின் சடலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஐ-15)


# வாழ்த்துகின்றோம்



சமூக சேவையாளர், வைத்திய கலாநிதி

வை.தியாகராஜா

அவர்கள்

அகில இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.மாவட்டப் பிரிவுத் தலைவராகத் தெரிவாகியமையையிட்டு மனமார வாழ்த்துகின்றோம்.

யாழ்ப்பாணம்

தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகத்தினர்.

(C15260)



# மரண அறிவித்தல்

## திருமதி நாகமுத்து பொன்னம்மா

(பொன்னம்மா ஆச்சி)

மீசாலை கிழக்கைச் சேர்ந்த திருமதி நாகமுத்து பொன்னம்மா நேற்று (11.02.2001) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் நாகமுத்து சண்முகநாதன் (ஓய்வுபெற்ற பொலீஸ் இன்ஸ்பெக்டர்) அவர்களின் தாயாரும், திருமதி பற்றிமாபூத் அவர்களின் அன்பு மாமியாரும் அன்ரன் துஷ்யந்தன் (யாழ்.மருத்துவ பீடம்), டேமியன் நவப்பிரகாஸ் (யாழ்.மருத்துவ பீடம்), பேனாட் சுலோசன் (கொழும்பு), அன்ரன் சுவர்ணன் (யாழ்.மருத்துவ பீடம்), பிரேமினி (ஆசிரியை, கொழும்பு) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அக்ஷயாவின் அன்புப் பூட்டியும், காலஞ்சென்ற லம்போதரன் (அரச கணக்காளர்), கனகநாயகி, கனகபூரணி (ஓய்வு பெற்ற ஆசிரியை), கனகசிங்கம் (கிளிநொச்சி), கனகசோதி (ஆங்கில ஆசிரியை, மாலைதீவு) ஆகியோரின் சிறிய தாயாரும், சரஸ்வதி, கமலராணி (கந்தர்மடம்) ஆகியோரின் மாமியாரும், சத்தியசீலன் (ஆசிரிய ஆலோசகர், வவுனியா), சத்தியவதனி (கிளிநொச்சி), சத்தியசிவம் (கிளிநொச்சி), காலஞ்சென்ற சத்தியமூர்த்தி மற்றும் சத்தியவாணி (விவசாய பீடம்), சத்தியரூபன், சத்தியசோதி ஆகியோரின் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஆடியபாதம் வீதி ஊனமுற்றோர் புனர்வாழ்வுக்கழக ஒழுங்கையில் 53/13 ஆம் இலக்க இல்லத்தில் இன்று (12.02.2001) திங்கட்கிழமை பி.ப.1.00 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*53/13, ஊனமுற்றோர்*
*புனர்வாழ்வுக்கழக ஒழுங்கை,*
*(மருத்துவபீட அருகில்)*
*ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.*

தகவல்:
க.கனகபூரணி
(ஓய்வு பெற்ற ஆசிரியை)

(84071)

# இடப்பெயர்வில் கைதடி வடிசாலைக்கு ரூ.1 கோடி 75 லட்சத்துக்கு மேல் நட்டம்

தென்மராட்சி,பெப்.12

கைதடி வடிசாலையில் கைவிட்டு வந்த பொருள்களை மீட்டு வரச்சென்ற தென்மராட்சி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியின் உத்தியோகத்தர்கள் அங்கு எந்தவொரு பொருளும் இல்லாத நிலையில ஏமாற்றத்துடன் - வெறுங்கையுடன் - திருமபினர்.

வடிசாலையில் பொருளகள் எதுவும் மீட்கப்படாததால் கொத்தணிக்கு ஒரு கோடியே 75 லட்சம் ரூபா நட்டமேற்பட்டுள்ளதாகவும்-

வடிசாலைக்கட்டடத்திற்கு அருகே விமானக்குண்டு வீழ்ந்து வெடித்துள்ளதாகவும் -

கட்டடக்கூரைகள் பலத்த சேதத்துக்கு உள்ளாகியுள்ளதாகவும்-தெரிவிக்கப்பட்டது.

கடந்த வாரம் கோப்பாய் ஊடாக கொத்தணித் தலைவர் சி.தவராசா, பொது முகாமையாளர் சி.இரத்தினசிங்கம் உட்பட 15 பேர் வடிசாலையில் பொருள்கள் மீட்டுவரச் சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சாராயம் செய்வதற்கு வைக்கப்பட்டிருந்த 52லட்சம் ரூபா பெறுமதியான 26 ஆயிரம் போத்தல் மதுசாரமும், 77 ஆயிரம் ரூபா பெறுமதியான 450 போத்தல் சாராயமும் காணாமல் போயுள்ளது எனவும்-

இவற்றுடன் அங்கு கைவிட்டு வந்த பொறித்தொகுதிகள், தளபாடங்கள், உருக்குத் தொட்டிகள், போத்தல் மூடிகள், பெட்டிகள், பரல்கள், ஜெனரேற்றர், 100 கூரை சீற்றுகள் ஆகியவற்றையும் காணவில்லை எனவும் - தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே கொத்தணியினால் வரணியில் நடத்தப்பட்ட வடிசாலை 1991 ஆம் ஆண்டு எரிந்த போதும்-

1996 ஆம் ஆண்டு பாதுகாப்பு அரணுக்கு வெளியே வடிசாலை இருந்ததால் அப்போது கைவிடப்பட்டதாலும்-

கொத்தணிக்கு பலகோடி ரூபா நட்டம் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

வடிசாலைக்கட்டட நிர்மாண மற்றும் திருத்த வேலைக்குக் கொத்தணி அமைப்பில் உள்ள சாவகச்சேரி, பளை, கொடிகாமம் ஆகிய சங்கங்களிடமிருந்து 30 லட்சம் ரூபாவைக் கொத்தணி கடனாகப் பெற்றிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

## ஓவியப் போட்டி

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி மகளிர் அபிவிருத்தி நிலையம் பாடசாலை மட்டத்தில் மாணவர்களுக்கும திறந்த முறையில் ஏனையவர்களுக்கும் தனித்தனியே ஓவியப்போட்டிகளை நடத்த[illegible]து.

பாடசாலை மட்டத்தில் தரம் 10 தொடக்கம் 13 வரை இரு பிரிவுகளாகப் போட்டிகள் இடம் பெறும். ஒவ்வொரு பிரிவிலும் தலா 3 ஓவியங்கள போட்டிக்கு அனுப்பப்படவேண்டும்.

ஓவியங்கள் யாவும் கண்காட்சியில் இடம்பெறும். கண்காட்சியில் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று ஓவியங்களுக்குப் பரிசில்களும், பத்து ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படும். கண்காட்சிக்கு வரும் ஓவியங்கள் அனைத்துக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

"பெண்கள் முன்னேற்றத்துக்குத் தடையான சமூகப் பின்னணி", "பெண்கள் எதிர்கொள்ளும் வன்முறை", "வீட்டு வன்முறைகள்", "பெண் அடக்குமுறை வடிவங்கள்", "பெண்கள் முன்னேற்றம்" ஆகிய ஐந்து தலைப்புக்களை மையக்கருவாகக் கொண்டு ஆக்கங்கள் அமையவேண்டும்.

(ம-173)

# தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம்

## 8,9 ஆம் திகதிகளில் திருகோணமலையில்

திருகோணமலை, பெப்.12

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தாய்ச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் அடுத்த மாதம் 8ஆம், 9ஆம் திகதிகளில் திருகோணமலை புனித மரியாள் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கூட்டம் தொடர்பான அறிவித்தல்கள் சம்பந்தப்பட்டவர்கள் அனைவருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் அறிவித்துள்ளார்.

இந்தக் கூட்டத்தில் புதிய வருடத்துக்கான உறுப்பினர் தெரிவு இடம்பெறும் எனவும் -

உறுப்பினர் தெரிவில் போட்டி காணப்பட்டால் யாழ்ப்பாணம், வன்னி மற்றும் திருகோணமலை ஆகிய இடங்களில் தனித்தனியே வாக்களிப்பு நடத்தப்படும் எனவும் -

அவர் அறிவித்துள்ளார்.(உ-7)

# தமிழக மீனவர்கள் நால்வர் நேற்று விடுவிக்கப்பட்டனர்

கொழும்பு,பெப்.12

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு கொழும்பு மீரிகான சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 4 தமிழக மீனவர்கள் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த ராமர் (வயது 19), கோபிநாத் (வயது 19), மார்க்கண்டன் (வயது 15), பெர்ணாண்டஸ் ஆகியோரே விடுவிக்கப்பட்டவர்களாவர்.

கடந்த ஆண்டு ஜனவரி மாதம் 20ஆம் திகதி இராமேஸ்வரத்தில் இருந்து இயந்திரப் படகில் புறப்பட்ட இவர்கள் இலங்கை - இந்திய கடல் எல்லையில்- கச்சதீவுப்பகுதியில் - மீன் பிடித்துக் கொண்டிருந்த சமயம் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

விடுதலை செய்யப்பட்ட நால்வரும் நேற்றே இராமேஸ்வரத்துக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

(உ-ம)


சைவநெறி செயல்நூல்

அரசாங்க புதிய பாடத்திற்கமைய வெளிவந்த சைவநெறி தரம் 1 தொடக்கம் 11 வரையுள்ள வகுப்புகளுக்கு செயல் நூல் எழுதக் கூடியவர்கள் தாம் எதிர்பார்க்கும் கிரய விவரங்களுடன் எம்முடன் தொடர்பு கொள்க. பதிப்புரிமை எம்மைச் சார்ந்தது!

அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்
கைதடி.
தொடர்பு முகவரி: ஆறுமுகம் கந்தையா J.P.
320, செட்டியார் தெரு,
கொழும்பு - 11.
தொலைபேசி: 334004 (83984)


## புலிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்த நெருக்குதலே பிரிட்டிஷ் அரசாங்கத்தை இது விடயத்தில் ஒரு முக்கிய முடிவுக்குத் தள்ளி விட்டது." - இப்படி பிரிட்டிஷ் செய்தியாளர்கள் கூறுகின்றனர்.

"புலிகளைத் தடைசெய்யக் கூடாது என்ற அழுத்தம் இப்போதுதான் - கடைசி நேரத்தில் தான் - பல தரப்புக்களில் இருந்தும் வருகின்றது. கடைசி நேரத்தில் இத்தகைய அழுததங்கள் உச்சக்கட்டத்தை அடைந்தால், அது பிரிட்டிஷ் அரச தலைமைப் பீடத்தின் மனதை மாற்ற வைக்கலாம் என்று கூறுவதையும் நிராகரித்துவிட முடியாது. என்றாலும இந்த அழுத்தம் காலம்பிந்தித்தான் வருகின்றது என்பதையும் யாவரும் மறுக்கமுடியாது." - இப்படி அந்தச் செய்தியாளர்கள் மேலும் குறிப்பிட்டனர்.

(உ)

## சமாதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'சுடர் ஒளி' வார இதழுக்கு வழங்கிய பேட்டியில் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்திருந்தார்.

அக் கருத்துக்குப் பதிலளிக்கும் விதத்திலேயே ஜனாதிபதி நேற்று அறிக்கை விடுத்தார்.

அதில் அவர் தெரிவித்ததாவது:-

"ஐரிஷ் குடியரசு இராணுவத்தை அந்த நாட்டு அரசாங்கம் தடை செய்திருந்தபோதும் அந்த அமைப்புக்கும் பிரிட்டிஷ் அரசுக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்கள் இடம் பெற்றன என்பதைச் சமாதான முயற்சிகளில் ஈடுபட்டுள்ள நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்மிடம் நான் சுட்டிக்காட்டியுள்ளேன்.

"எனவே பிரிட்டன் விடுதலைப் புலிகளைத் தடைசெய்தாலும் சமாதானப் பேச்சுக்கள் பாதிக்கப்பட மாட்டாது.

"பிரிட்டனின் தடையால் சமாதான முயற்சிகள் பாதிப்படையும் என்று புலிகள் மேற்கொள்ளும் பிரசாரம் அர்த்தமற்றது."

- இப்படி ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (உ-ம-7)

# விமானத்தில் கோளாறு

கொழும்பு,பெப்.12

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து நேற்றுக் காலை லண்டன் நோக்கிப் புறப்பட்ட இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான ஏ-340 ரக பயணிகள் விமானம் ஒன்று அதன் சில்லில் ஏற்பட்ட கோளாறை அடுத்து புறப்பட்டு 5 நிமிட நேரத்திலேயே உடனடியாக தரையிறக்கப்பட்டது. (உ-7)

# 3 நாடுகளின் இராணுவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரி தலைமையிலான குழுவை ஐந்து நாள் விஜயமாக கடந்த மாத இறுதியில் கொழும்புக்கு அனுப்பியிருந்தார்.

பாகிஸ்தான் இராணுவத்தின் சிரேஷ்ட தலைமை அதிகாரி லெப்ரினன்ட் ஜெனரல் முகமட் யூசுப்கான், பாகிஸ்தான் இராணுவத்தின் உளவுப்பிரிவு இயக்குநர் நாயகம் மேஜர் ஜெனரல் இஷான் அல்ஹக், பிரிகேடியர் குத்ஷிட் அகமட், கேணல் யசீர் அகமட் புஜ்வா ஆகியோர் இக்குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

பாகிஸ்தான் இராணுவம், இலங்கை இராணுவத்துக்கு வழங்கக்கூடிய உதவிகள் குறித்து பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளரின் பிரதிநிதிகள் இலங்கை அதிகாரிகளோடு விரிவாகப் பேச்சு நடத்தினர்.

இந்த இருநாட்டு இராணுவ அதிகாரிகளையும் தொடர்ந்து கடந்த வாரம் அமெரிக்காவின் உயர்நிலை இராணுவ அதிகாரி ஒருவர் தலைமையிலான குழு ஒன்று கொழும்புக்கு வந்தது.

அமெரிக்காவின் பசுபிக் பிராந்தியத்துக்கான விசேட நடவடிக்கைக் கட்டளையகத்தின் தளபதி பிரிகேடியர் ஜெனரல் டொனால்ட் வூர்ஸ்டரே அந்த உயர்நிலை இராணுவ அதிகாரி ஆவார்.

அமெரிக்க இராணுவத்தின் பசுபிக் கட்டளையகத்தை வழிநடத்தும் மூதத தளபதிகளுள் முக்கியமானவர் இவர் எனக் கூறப்படுகின்றது.

தற்போது இலங்கைப் படைகளுக்கு அமெரிக்கா வழங்கும் பயிற்சிகளை ஒழுங்குபடுத்தி, நவீன மயப்படுத்துவது குறித்து அவர் சிரத்தை காட்டியதாகக் கூறப்படுகின்றது.

பாதுகாப்புப் படையினரின் உயர் அதிகாரி ஜெனரல் றொஹான் தளுவத்த, இராணுவத்தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல ஆகியோருடனும் முப்படைகளின் பயிற்சி நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான உயரதிகாரிகளுடனும் பிரிகேடியர் ஜெனரல் டொனால்ட் வூர்ஸ்டர் விரிவாகப் பேச்சு நடத்தினார் எனத் தெரிவிக்கப்பட்டது.

(உ)

# லண்டனில் அன்ரன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனைவி அடேல் பாலசிங்கமும் மட்டுமே வீட்டில் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் குறித்து முறையிடப்பட்டவுடன் சம்பவ இடத்துக்கு விரைநத பிரிட்டிஷ் பொலீஸார் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். விசாரணைகளுக்காக ஸ்கொட்லண்ட் யார்ட பொலீஸாரின் உதவியும் பெறப்படவிருக்கிறது.

வழமையாக அன்ரன் பாலசிங்கத்தின் வீட்டுக்கு வழங்கப்படும் பாதுகாப்பு வார இறுதி நாள்களில் தளர்த்தப்பட்டிருந்ததாகவும்-

அந்தச் சந்தர்ப்பத்திலேயே தாக்குதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும்- தெரிவிக்கப்படுகிறது.

தற்போது பாலசிங்கத்தின் வீட்டுக்கு தீவிர பொலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் பாலசிங்கத்தின் தனிப்பட்ட பாதுகாப்பையும் பொலீஸார் அதிகரித்துள்ளனர்.

இந்தத் தாக்குதலை லண்டனில் உள்ள சிங்களத் தீவிரவாத அமைப்புகளே நடத்தி இருக்கலாம் என்று பிரிட்டிஷ் பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.

இதேவேளை -

இந்தச் சம்பவம் குறித்து தீவிர விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என பிரிட்டிஷ் தொழிற் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரிட்டிஷ் அரசிடம் கோரியுள்ளனர்.

பாலசிங்கத்தின் வீடு மீதான தாக்குதலை வெறும் ஓர் அத்துமீறல் என்று கருத்தில் கொள்ளாது, உயிருக்கு உலைவைப்பதற்கான கிரிமினல் குற்றமாகக் கருதி விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

(உ-ம)

# யாழ்.நகரப் பகுதிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் 250 'வோல்ட்' அழுத்தத்துக்கு படிமாற்றம் செய்யப்பட்டு, பாவனையாளர்களின் இணைப்புகளுக்கு வழங்கப்படுகின்றது.

33 ஆயிரம் 'வோல்ட்' அழுத்தத்தில் வரும் மின்சாரத்தை 11 ஆயிரம் 'வோல்ட்' அழுத்தத்துக்குக் குறைகும் பிரதான மின்மாற்றிகளில் ஏற்பட்ட பழுது காரணமாகவே சுழற்சி முறையில் மின்சாரத்தை வழங்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த மின்மாற்றிகளின் ஊடாக யாழ்.நகருக்கு மின்சாரம் வழங்குவது மூன்று பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு தொடக்கம் அந்த மூன்று பிரிவுகளில் நாளாந்தம் இரண்டு பிரிவுகளுக்கு மாற்று முறையில் மின்சாரம் வழங்க ஏற்பாடாகி உள்ளது.

பரமேஸ்வரா பரிவர்த்தனை நிலையத்தில் உள்ள மூன்று பிரதான மின்மாற்றிகளில் ஒன்று ஏற்கனவே பழுதடைந்து விட்டதால் கடந்த சில காலமாக மின் விநியோகத்தில் அடிக்கடி தடைகள் ஏற்பட்டு வந்தன.

பழுதுபட்ட முதலாவது மின்மாற்றி இன்னும் திருத்தப்படவில்லை. பாவனையில் இருந்த மற்றைய மின்மாற்றிகளில் ஒன்று சனிக்கிழமை திருத்தம் செய்யப்பட்டதால், புதிதாக வகுக்கப்பட்ட பிரிவுகளில் இரண்டுக்கு மட்டுமே அன்றைய தினம் இரவு மின்சாரம் வழங்கக் கூடியதாக இருந்தது.

சனிக்கிழமையன்று பலாலி வீதி, ஆரியகுளம், மடத்தடி, குருநகர் ஆகிய பகுதிகள் அடங்கிய மூன்றாவது பிரிவுக்கு மின் விநியோகம் செய்யப்படவில்லை. பாவனையில் இருந்த மற்றைய - இரண்டாவது - மின்மாற்றியில் திருத்த வேலைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் நேற்று ஏனைய இரண்டு பிரிவுகளுக்கும் மின்சாரம் வழங்க முடியவில்லை. மேலே குறிப்பிட்ட மூன்றாவது பிரிவுக்கே நேற்று இரவு மின்சாரம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.

இன்று அந்த இரண்டாவது மின்மாற்றி முழுமையாகத் திருத்தம் செய்யப்பட்டால் ஒரு நாளில் இரண்டு பிரிவுகளுக்கு என்ற மாற்றுமுறையில் மின்சார விநியோகம் செய்யப்படும் என்றும் திருத்த வேலைகள் முடியாது விட்டால் இன்று திங்கட்கிழமை ஒரு பிரிவுக்கு மட்டுமே மின்சாரத்தை விநியோகிக்கக் கூடியதாக இருக்கும் என்றும் மின்சார சபை வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

(ம-7-ரி)


உங்கள் அன்புக்குரியவருக்கு
அன்புத் தினத்தில்
ஓர் அன்புப் பரிசு கொடுக்க வேண்டுமா?
சந்தியா
மல்ரி கோட்யாட்
இல.2, பெரியகடை, யாழ்ப்பாணம்.
பிரதான வீதி, பண்டத்தரிப்பு.
(84062)

SPOKEN ENGLISH
WITH
GRAMMAR
LECTURES BY:-
MR.M.A.HARI
✪ புதிய பிரிவு ஆரம்பம் ✪
நாளை (13.02.2001) செவ்வாய் மாலை 5 மணி
TUESDAY / THURSDAY } 5 p.m. - 6 p.m.
முக்கிய குறிப்பு :- வேலை செய்வோரும் இவ்வகுப்பில் அனுமதிக்கப்படுவர்.
HARY'S INSTITUTE
KONDAVIL EAST, KONDAVIL. (84037)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.02.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.